பக்கங்கள்-16 24.ஐப்பசி.2021 விலை-30.00





# தினப்புயல்

PIN news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –361

# சீனாவின் பொறியில் மாட்டிக்கொண்ட இலங்கை ஜனாதிபதி

## நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் குட்டையை குழப்பும் செயல்

## டயஸ்போராக்களை இலக்குவைக்கும் கோட்டாபய – நிலாந்தன்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சீனாவின் பொறியில் மாட்டிக்கொண்ட இலங்கை ஜனாதிபதி



இன்றைய அரசியலின் யதார்த்தத்தை புரிந்துகொள்வோமாகவிருந்தால் இந்த நாடு சீனாவின் பொறிக்குள் சிக்கியிருக்கிறது அல்லது சிக்கவைக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலந் தொடக்கம் இற்றைவரையிலான அரசியலை உற்றுநோக்குகின்றபோது குறிப்பாக வில்லியம் கோபல்லாவ தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரையிலான ஆட்சியாளர்களின் இனவெறிக் கலாச்சாரம் தொடர்ந்தும் கையாளப்படுவதனால் இன நல்லிணக்கம் என்பது இலங்கையில் இதுவரை பேணப்படவில்லை. தொடர்ந்தும் இந்நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருப்பதால் இலங்கையின் அரசியலை சரி செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இந்த நாட்டில் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்றால் சர்வதேச நாடுகளின் அழுத்தம் இந்த நாட்டில் இருக்கிறது என்பதே அர்த்தமாகும்.

65610 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இலங்கைத் தீவில் 2 கோடிக்கும்மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். குறிப்பாக சனத்தொகை குறைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்குகிறது. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ள காரணத்தினால் இலங்கைக்குள் சர்வதேச ரீதியான தாக்குதல்களை செய்ய முடியாத நிலைமையும். இயற்கையாக அமைந்துள்ள மலைகள் பாதுகாப்பு அரண்களாக விளங்குகின்றன. எனினும் தற்போது. அந்நிய நாடுகளின் தலையீட்டினால் கொவிட் போன்ற பல்வேறுவிதமான வைரஸ்கள் நாட்டில் பரவ காரணமாக அமைந்துள்ளது.

சிறப்பம்சங்களைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குவதனால் இந்த நாட்டுக்குள் இந்தியா. சீனா. அமெரிக்கா தமது ஊடுருவல்களை முடுக்கிவிட்டுள்ளது. உலகில் மிகச்சிறந்த கனிய வளங்களைக் கொண்ட நாடாகவும். தெற்காசியாவில் அதி உயர்ந்த கோபுரத்தினை உடைய நாடாகவும் (தாமரைக் கோபுரம்). இயற்கையாக மலைகளை பாதுகாப்பாகக் கொண்ட துறைமுகம் உள்ள நாடாகவும். அழகிய சுற்றுலாத்தளங்களைக் கொண்ட நாடாகவும். பெருந்தோட்டப் பயிர்களை அதிகமாக இன்றளவிலும் ஏற்றுமதி செய்கின்ற நாடாகவும் என இன்னும் பல்வேறான தனக்கேயுரிய சிறப்புக்களைக் கொண்டு ஆசியப்பிராந்தியத்தின் மையப் புள்ளியாக இருக்கும் இலங்கைத் தீவினை மேற்கூறிய நாடுகள் குறிவைத்துள்ளன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பது சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சிநிரல். யுத்தம் முடிந்த கையுடன். புலனாய்வுக் கட்டமைப்புக்களை பலப்படுத்த இலங்கை தவறியதனால் விளைவாகவே அந்நிய நாடுகள் இன்று இந்நாட்டுக்குள் பெருமளவில் ஊடுருவியுள்ளன. துறைமுக நகரம். தாமரைக் கோபுரம். அம்பாந்தோட்டை துறைமுகம். திருகோணமலை துறைமுகம் என சர்வதேச நாடுகளின் கையில் தாரைவார்க்கப்பட்டுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்தவே இலங்கையைக் குறித்த நாடுகள் தமது பொறிக்குள் சிக்கவைத்துள்ளன. அதிலும் குறிப்பாக சீனாவே இலங்கையை மீள முடியாத கடன் சுமைக்குள் வீழ்த்தியுள்ளது. கடனைப் பெற்றுக்கொள்ள இலங்கையின் பல பகுதிகளை சீனாவிற்கு விற்கின்ற நிலைமை இன்று உருவாகியுள்ளது.

இதனை இல்லாதொழிப்பதற்கு. சர்வதேச நாடுகளின் செயற்பாட்டினை நிறுத்துவதற்கு இலங்கை அவர்களுக்கு பெருந்தொகையான பணத்தினை மீள செலுத்தவேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இனவாதப் போக்கினை தொடர்ந்தும் இலங்கையரசு கடைபிடிக்குமாகவிருந்தால் சர்வதேச அழுத்தங்கள் மட்டுமன்றி உள்நாட்டுப் பொறிமுறைக்குள்ளும் சிக்கவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படும். அந்த உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தற்போதைய அரசாங்கம் அகப்பட்டுக்கொண்ட நிலையில் இதற்கானத் தீர்வு எட்டப்படாத நிலையில் இன்று மக்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக தமது எதிர்வினைகளை ஆற்றி வருகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினது அரசு இந்நாட்டிற்கு நன்மை பயக்கும் வகையில் செயற்படுவார்கள் என நம்பி மக்கள் வாக்களித்தனர். ஆனால் இலங்கையின் நிதி மற்றும் நிர்வாகம் என்பது பிரதமர் மஹிந்த குடும்பத்திடம் சென்றமையினால் அவற்றைச் சீர் செய்ய முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக ஒற்றையாட்சியினைக் கொண்டு. தனக்கான நலன் சார்ந்த நாடுகளையும் இணைத்துக் கொண்டு. தனது பரம்பரைஅரசியலை இந்த நாட்டுக்குள் திணித்துவிட முடியும் என்பது இன்றைய அரசின் நிலைப்பாடு.

தமிழினத்திற்கு வடகிழக்கு இணைந்த தாயகத்தை வழங்கப்போவதாகக் கூறியே நல்லாட்சி அரசாங்கத்தை மகிந்த ராஜபக்சவின் குடும்பம் வீழ்த்தியது. ஆனால் தற்போது நிலைமை மோசமடைந்து மகிந்த ராஜபக்சவினது குடும்ப அரசியலை ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கைகளில் சிங்களப் பெரும்பான்மை மக்களும். சிங்கள அரசியல் தலைமைகளும் தீவிரம் காட்டி வருகின்றனர். வரலாற்றில் படுதோல்வியடைந்த ரணில் அவர்களும். தற்போது தனது தலைமையிலான அரசினை உருவாக்கும் திட்டத்தில் இறங்கியுள்ளார். உள்ளூர் பிரச்சினைகளை சீர்செய்தால் மாத்திரமே. சர்வதேச நாடுகளின் தலையீடுகளை இந்த நாட்டிலிருந்து அப்புறப்படுத்தி சிங்கள. தமிழ். முஸ்லீம் இனத்தவர்கள் ஒற்றுமையாய் வாழ்வதற்கு வழியமைக்கும்.

நோர்வே மத்தியஸ்தம் வகித்த நாடுகள் இன்றுவரை தமது சுதந்திர இலக்கினை அடையாமல். மாறாக அந்த நாட்டில் மறைமுகமான இனச்சுத்திகரிப்பு இடம்பெற்று வருகிறது. அதுவே இலங்கையிலும் இடம்பெற்று வருகிறது. இலங்கையினது அரசியலை போருக்கு முன். போருக்குப் பின் என இரண்டாகப் பிரிக்கலாம். இவ்வரலாறானது உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களிலும் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. ஆகவே பகுத்தறிந்து தமிழ் மக்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே தமிழினத்திற்கான சுதந்திர வெற்றி இலக்கினை அடைந்துகொள்ள முடியும். அரசியலில் எதிரிக்கு எதிரி நண்பன் என்பது மாப்போல் சுவாரஸ்யமான விடயங்கள். ஆட்சி மாற்றம். கட்சி மாறுதல்கள் இடம்பெறுவது வழமையானதொன்று. ஆனால் எமக்கான இலக்கினை நாம் அடைந்திருக்கின்றோமா என்றால் அதுதான் இல்லை. சர்வதேச ரீதியாக தமிழினத்திற்கு விடுதலை கிடைக்க வேண்டும் என கடந்த 30 வருட காலமாக இந்தியாவிடம் தமிழினம் கையேந்தி நின்றபோதும் எமக்கு இறுதியாகக் கிடைத்த பரிசு ஏமாற்றமடையத்தக்கதானதொரு மாகாணசபை மட்டுமே.

குறிப்பாக இந்த 13வது திருத்தச்சட்டத்தில் மாகாணத்திற்கு என கூறப்பட்டிருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை செயற்படுத்துவதற்கான முழு அதிகாரமும் மாகாணத்திற்கு இருக்கின்றபோதும். இன்றும் அவை மத்திய அரசின் கீழ். ஆளுநர் என்கிற ஒருவரை அரசு நியமித்து அவர் மூலமாகக் கையாண்டு வருகிறது. மாகாண முதல்வரும். அமைச்சர்களும். உறுப்பினர்களும் அரசு கூறுவதைச் செய்கின்றவர்களாக பதவியில் இருக்கவேண்டிய நிலை தோன்றியுள்ளது. மாகாண சபையைக் கட்டுப்படுத்த அரசு நினைக்கிறது. இன்றைய அரசு மாகாண சபையை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. மாகாண சபைக்கானத் தேர்தலும் ஜனநாயகத்திற்கு முரணாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. வெறும் அமைச்சர்களாகவும். உறுப்பினர்களாகவும் மாத்திரமே வடகிழக்கு அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் செயற்படுத்த வைக்கப்படுகின்றனர். அவ்வாறாகவிருந்தால் மாகாண சபை என்பது. சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குக் கீழ் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பாரிய திட்டமிட்ட செயல் என்றே கூறவேண்டும்.

ஒப்பரேசன் பூமாலை இடம்பெற்றபோது வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தமிழ் ஆயுதப்போராளிகளின் கைகளில் ஒப்படைக்கப்படும் என்கிற நிலை இருந்தபோது. துரதிஸ்டவசமாக இலங்கையரசு. அப்போதிருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ரணசிங்க பிரேமதாசா இருவரும் நரித்தனமாக தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி இந்தியாவிற்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்க வழியமைத்துக் கொடுத்தனர். இதன் காரணமாக தமிழ் ஆயுதக்குழுக்களுக்கு எதிராக இந்திய இராணுவம் செயற்பட ஆரம்பித்தது. இவ்வாறான ஒரு முறுகல் நிலை இருந்தபோது விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அமைய இந்திய அரசு இந்த நாட்டில் இருந்து வெளியேறவேண்டும். அதற்காகவே தியாகி திலீபன் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து தனதுயிரை மாய்த்துக்கொண்டார். காந்தியத்திற்கு மதிப்பளிக்கின்ற இந்தியா இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் இலங்கையில் இருந்து முற்றாக வெளியேறியது. விடுதலைப்புலிகளையும் ஏனைய தமிழ் ஆயுதக்கட்சிகளையும் பிரித்தாள. இலங்கை மேற்கொண்ட சதி வேலையே முன்னாள் பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமாக அமைந்தது.

சீனாவின் பொறிக்குள் இலங்கை சிக்கியிருப்பது என்பது தமிழர்களுக்கு ஒருவிதத்தில் நன்மை பயக்கும். சீனாவின் ஆக்கிரமிப்பு வடகிழக்கில் தொடர்ந்தால் அது பற்றி பரிசீலனை செய்யவேண்டுமே தவிர. சீனக்கொலனி உருவாவதை இனி வரும் காலங்களில் எவராலும் தடுக்க முடியாது. ரணில் வந்தாலும். மைத்திரி வந்தாலும் அவர்களுடன் இந்த உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்படும். எதிர்காலத்தில் டுவைவடந சைனாவாக இலங்கை மாற்றப்பட்டு அதற்கு தனிச்சட்டம் உருவாக்கப்பட்டு வர்த்தக வியாபாரங்கள் செய்யப்படும். இதனால் பொருளாதாரத்தில் சீனா கொண்டிருந்த நம்பிக்கை அவர்களுக்குக் கைகூடும். இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சி ஏற்பட்டு. சோமாலியாவைப் போல இலங்கை சுடுகாடாக பிணங்களை கழுகு திண்கின்ற நிலைமை ஏற்படும்.

ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற அதன் விவசாயம் மற்றும் கல்வி இரண்டிலும் இலங்கை அரசு தனது தீவிரப்போக்கினைக் கடைப்பிடித்து வருகிறது. இதனைவைத்து இவர்கள் அரசியல் செய்யலாம் என்று களமிறங்கியுள்ள நிலையில். இன்று இலங்கையின் பூகோள மற்றும் உள்ளூர் அரசியலில் பாரிய பிரச்சினைகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை சீர்செய்ய இலங்கை அரசு சர்வதேச நாடுகளுடனான அரசியல் தொடர்புகளைத் துண்டிக்கவேண்டும். இல்லாதுபோனால் பாரிய சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகி. சர்வதேச நாடுகள் உதவி வழங்குகின்றோம் என்ற போர்வையில் இலங்கையின் வளங்களைச் சுரண்டி. தமது உற்பத்தியைப் பெருக்கி. இந்நாடு மேலும் அடிமைத்தனமான நாடாக பயணிக்க இந்த நாடுகள் வழிவகுக்கும். ஆகவே சீனாவின் பொறியில் இருந்து தப்புவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சீனாவின் கடன்களை மீளச்செலுத்தி. அவர்களின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அதற்காக இந்தியாவையோ. அமெரிக்காவையோ அரவணைத்துக் கொண்டு செல்லவேண்டும் என்பது பொருள் அல்ல. இலங்கையில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதில் தீவிரம் காட்டிய நாடுகள். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கையைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டன. கொவிட் வைரசின் தாக்கம் அனைத்து நாடுகளிலும் உணரப்பட்டது. அந்நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டாலும் மீளவும் அவர்கள் துரிதகதியில் தத்தம் நாடுகளின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி வருகின்றனர். இந்த கொவிட் வைரசினைத் தொடர்ந்தும் இலங்கை காரணமாகக் காட்ட முடியாது. உலக நாடுகளின் அரசியல் பொறியில் சிக்கியுள்ள பிரதமர் மஹிந்த குடும்பம். ஒன்றில் அதிலிருந்து மீளவேண்டும் அல்லது பாராளுமன்றைக் கலைத்து தேர்தலை நடத்தி. ஆட்சி மாற்றத்திற்கான வேலைகளைச் செய்யவேண்டும். தொடர்ந்து இவ்வாறு இந்த அரசின் ஆட்சி முன்னெடுக்கப் படுமாகவிருந்தால் மஹிந்த ராஜபக்சவின் குடும்ப அரசியலை இலங்கையில் இருந்து ஓரங்கட்டுகின்றதொரு நிலைமையே உருவாக்கப்படும். ஆகவே அரசாங்கம் தொடர்ந்தும் இந்த பூகோள அரசியலில் நம்பிக்கை கொள்ளாது. உள்ளூர் கட்டமைப்புக்களை உருவாக்கி. சிறுபான்மையினருக்கானத் தீர்வை படிப்படியாகப் பெற்றுக்கொடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதன் ஊடாக இந்த நாட்டின் பொருளாதாரத்தை பாரியளவில் கட்டியெழுப்ப முடியும் என்பதே இன்றைய யதார்த்தம் கலந்த உண்மை.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## கொவிட் பரவலும் இலங்கையின் பொருளாதாரமும்

உலக அளவில் பரவியிருக்கும் கொவிட் வைரஸ் தொற்றின் காரணமாக நாடுகளின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது யாவரும் அறிந்த விடயம். எனினும் தற்போது கொவிட் வைரசானது கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாக அறிய முடிகிறது. உலக அளவில் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இதற்குப் பிரதானமான காரணமாக உலக நாடுகள் துரிதகதியில் கொவிட் தடுப்பூசிகளைப் பயன்படுத்தியமையே காரணம் எனக் கூறப்படுகின்றது. எனினும் ஆபிரிக்க நாடுகள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையில் பின் தள்ளப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. ஏனைய நாடுகளுக்கு இலவசமாக தடுப்பூசிகளை வழங்கும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடமும் பிடித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையிலும் நாளாந்த தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் தரவுகளின் மூலமாக அறிய முடிகின்றது. எனினும் இலங்கையில் தொடர்ச்சியாக அவதானமாக மக்களை செயற்படுமாறு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார ரீதியாக வீழ்ச்சி கண்டிருந்த இலங்கை. திடீரென பரவிய கொவிட் வைரசின் காணமாக மேலும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டது. நாட்டின் ஏற்றுமதி மற்றும் உற்பத்திகள் வெகுவாகப் பாதிப்படைந்தன. அத்துடன் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. வெளிநாட்டில் தங்கியிருந்து வேலை பார்த்தோர் பெருமளவில் நாட்டைநோக்கி வந்துசேர்ந்துள்ளனர். இவ்வாறான காரணிகளால் இலங்கை சர்வதேச ரீதியாக மேலும் மேலும் கடன்களைப் பெறவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

எனினும் தற்போது நாட்டினது செயற்பாடுகள் அனைத்தும் வழமையான நிலைக்குத் திரும்பி வருவதுடன். சர்வதேச விமானப் பயணங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீண்டும் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. அதேவேளை மாணவர்களும் உயர் கல்விக்காக வெளிநாடுகள் நோக்கி அதிகளவில் செல்வதாக தெரியவந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மீள கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேநேரம். இலங்கையில் என்றுமில்லாதவாறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால். நாட்டு மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந்துள்ளனர். இந்நிலைமையினை விரைவில் மாற்றியமைக்கவேண்டிய பொறுப்பு நாட்டின் அரசிற்கு இருக்கிறது.

# 165 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

பெறுகின்ற சமயத்தில் அவசியம் இந்த மூன்று கட்டங்களை யும் கடந்து செல்ல வேண்டுமென்ற விதிமுறை வெளித்தோற்றத்தில் தவிர்க்கப்படுகின்றது. ஆனாலும் இச்சந்தர்ப்பங்களில் அவசியம் கவனத்திலெடுக்கவேண்டிய விடயம் யாதெனில், எதிரியின் முன்னேறித் தாக்குதல் மூலோபாயக் கட்டம் காலணித்துவ ஆதிக்கத்தை நிலைநாட்டுதலில் அல்லது பிரதேசக் கூட்டுக்களுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றுதலில் அல்லது அரசுக்குச் சார்பான மக்களெதிர்ப்புத் திருப்பம் ஏற்படுதலில் முடிவடையும்.

இராணுவ நோக்கங்களை எட்டியதும் (உண்மையான சமர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலோ அல்லது முன்னைய காலங்களில் மேற்கொண்டோ) கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் எதிரி தன்னை நிலைப்படுத்திக் கொள்வான். பின்புலப்பகுதிகள் மீதான கட்டுப்பாடுகளை நிலை நாட்டத் தொடங்குவான். தனது உள்ளக இராணுவ அரசியல் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவான். அதாவது சுமூக நிலையை உருவாக்குவான். எதிர்த்தரப்பினருடன் ஒப்பிடுகையில் அவன் கடந்த காலங்களை அசட்டையீனம் செய்யத் தொடங்கிவிடுவான்.

இந்நேரத்தில் எதிர்த் தரப்பினரோ இவ்வாறான சூழ்நிலையைக் காலணித்துவப் போரின் தொடர்ச்சியாக அல்லது ஆக்கிரமிப்புச் சனியன்களின் ஆதரவுடன் பொம்மை அரசாங்கம் நடத்தும் (பெயரளவில்) காலணித்துவத்திற்கு எதிரான ஆட்சியாக அல்லது உள்நாட்டுப் போர் நிலைமையாகக் கருதிக்கொள்கின்றார்கள். இவ்வழுத்தம் கூடிய எதிர்ப்புக் காலகட்டம் (இது முதலாவது கட்டத்திலிருந்து, இரண்டாவது கட்டத்தின் ஆரம்பப் பகுதிக்குக் கடத்தப்படாமலிருந்தால்) உண்மையான செயல் நடவடிக்கைகளாக மாற்றமடைகின்றதுடன், இரண்டாவது கட்டத்தோடு குறுஞ்சமரும் ஆரம்பிக்கின்றது. இதுவே ஆரம்பக்கட்டமாகவும் இருக்கின்றது.

**கெரில்லாப் பிரதேசங்களையும் ஆதார முகாம்களையும் உருவாக்குதல்**

போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் எதிர்ப்பியக்கப் படைகளின் பிரதான பணியாக ஆதார முகாம்களையும் கெரில்லாப் பிரதேசங்களையும் உருவாக்குவதே விளங்குகின்றது. ஆதார முகாம்கள் என்பதன் அர்த்தம் யாதெனில், கிளர்ச்சியாளர்களின் கட்டளையகங்கள், அவர்களின் சமர்ப் பிரிவுகள், விநியோகப் படைப் பிரிவுகள் போன்றவற்றின் இடைக் காலத் தங்கல் நிலைகள் என்பதாகும். தங்கங்கள், களஞ்சியங்கள் போன்றன தவிர அங்கே கட்டளை நிலையங்கள், சமர்த் தயார்ப்படுத்தலுக்கான வகுப்பறைகள் ஆகியன உருவாக்கப்படுவதுடன் தொடர்பு ஊடகங்களும் நிலைப்படுத்தப்படுகின்றன. மருத்துவ உதவி நிலையங்களும் பின்புல விநியோக நிலையங்களும் உருவாக்கப்படுகின்றன. ஆதார முகாம்கள் சந்தர்ப்பவசத்தால் கண்டுகொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்காக வழமையாகச் சன நடமாட்டமற்ற இடங்களிலேயே அவை உருவாக்கப்படுகின்றன. ஆனாலும் பொருட்களின் விநியோகத் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஆதார முகாம்களுக்கான இடங்கள் அருகிலுள்ள மக்கள் வாழ்விடத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு நாளுக்குட்பட்ட (நடைப்) பயணத் தூரத்தில் இருக்கின்ற பிரதேசங்களில் தெரிவு செய்யப்படுகின்றன.

கெரில்லாக்களின் பிரதேசங்கள் என அழைக்கப்படுபவை - இது இருபக்கக் கட்டுப்பாட்டைக் கொண்ட நிலப்பரப்பாகும். இங்கே எதிர்ப்பியக்கப் படைகள் தமது ஆதார முகாம்களிலிருந்து வெளியேறிச்சென்று நாசகார வேலை, பதுங்கித் தாக்குதல்கள், திடீர்த் தாக்குதல்கள், ஏனைய அளவிடையில் மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய நேர நடவடிக்கைகள் போன்றனவற்றை மேற்கொள்கின்றன.

குறுஞ்சமர்களின் சிறப்பியல்புகளை ஆராயும்போது, கூடுதலான சமயங்களில் அதன் மேல் பௌதீக புவியியல் நிலைமைகளின் தாக்கங்கள் எவ்வாறாக இருக்கின்றன என்பதும் கவனத்திலெடுத்துக் கொள்ளப்படுகின்றது. சந்தேகத்திற்கிடமின்றி, எதிரியுடனான போராட்டப் பணிகளின் ஒரு பகுதியை இயற்கை, பொறுப்பேற்கும் வகையில் இவ்வாறான சமர்களின் நுட்பங்கள் வகுக்கப்படுகின்றன. அதாவது, மலைகள், காடுகள், சதுப்புநிலங்கள் ஆகியன தற்காப்பு மறைப்புக்களாக இருந்து, தொழினுட்ப சாதனங்களைக் கொண்ட எதிரியின் தாக்குதல் மற்றும் படைநகர்த்தும் சாத்தியங்களை மட்டுப்படுத்துதலாகும்.



வெப்பம் அவர்களது வாகனங்களது இயந்திரங்களுக்கு இடையூறாக இருக்கின்றது. குளிர் அவர்களை நகரவிடாது தடுக்கின்றது. மணல், சதுப்பு நிலம் அல்லது வெள்ளம் நிறைந்த நெல்வயல்கள் போன்றன எதிரியின் கட்டுப்பாடற்ற சுயாதீன நிலப்பரப்புக்களை வைத்திருக்க உதவுகின்றன. ஆனால், இவ்வாறான சூழ்நிலைகளில் செயற்படுகின்ற கெரில்லாக்கள் இயற்கையால் சூழப்பட்ட நிலையில் இதுவரை வாழ முடியாது. அத்துடன், தமது இயற்கைத் தளத்திலிருந்து வெளியேறவேண்டியும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். குறித்த சூழ்நிலைகளில் மாத்திரமே கிளர்ச்சிக் கெரில்லாப் போரை வெற்றிகரமாக நடத்துவது சாத்தியம் என்ற கொள்கையளவில் தவறான முடிவுக்கு புவியியல் காரணியின் மதிப்பீடு, ஏனைய பிரதேச இயல்புகள் போன்றன இட்டுச் செல்கின்றன. இக்குறித்த சூழ்நிலைகள் சமர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற முறைகளிலும் வழிவகைகளிலும் குறித்த தாக்கத்தைச் செலுத்துகின்றனவாம். இவ்விடயம் பற்றி எர்னெஸ்டோ சேகுவேரா பின்வருமாறு குறிப்பிடுகின்றார். உண்மையில், ஒவ்வொரு நாட்டினது புவியியல் மற்றும் சமூக நிலைமைகள் கெரில்லாச் சமர் வளர்ச்சியடைவதற்கான முறைகளையும் வழிவகைகளையும் நிர்ணயிக்கின்றன. ஆனால், இதனது பிரதான விதிமுறைகள் இவ்வகையைச் சேர்ந்த சகல சமர்களுக்கும் பொருத்தமானதாகும். சகல கண்டங்களிலும் நடைபெற்ற கெரில்லாச் சமர் நிலைமைகள் இந்தக் குறிப்பின் நியாயப்பாட்டை உறுதிப்படுத்துகின்றன.

குறிப்பாகச் சகல நாடுகளினதும் அணுகமுடியாத (ஏறிச் செல்ல முடியாத) மலைகள், கடந்து செல்ல முடியாத புதர்கள் அல்லது சதுப்பு நிலங்கள் போன்ற இடங்களில் எப்பொழுதும் ஆதார முகாம்கள் உருவாக்கப்படுவதில்லை. ஒதுக்கமான அணுகக்கடினமான பிரதேசம் இல்லையென்றால், சமரைப் பிரதேசங்களிலும் நீர்த்தேக்க அல்லது ஆற்றுப்பகுதிகளிலும் மணற் பிரதேசங்களிலும் ஆதார முகாம்கள் அமைக்கப்பட்டன. இதன்போது, சாத்தியமான இயற்கை இயல்புகள் இல்லாமை முகாமின் இடைக்காலப் பருவகால நாடோடித்தனமான தன்மையால் கணிசமான அளவு சமப்படுத்தப்படுகின்றதுடன், அதற்குரிய காவல் மற்றும் தற்காப்பு வழிவகைகள், திசை திருப்பல் செயற்பாடுகள், பிரதேசத்திற்குக் கண்ணி வைத்தல், தீவிர சமர் நடவடிக்கைகளையும் ஏனைய தந்திரோபாய இராணுவச் செயற்பாடுகளையும் தவிர்த்தல் போன்றவற்றாலும் கணிசமானளவு சமப்படுத்தப்படுகின்றது.

**தொடர்வான்...**
**நெற்றிபொறியன்**

# நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் குட்டையைக் குழப்பும் செயல்




இலங்கையில் தேசிய ரீதியிலானப் போராட்டங்கள் வெற்றியடையாமைக்கானக் காரணங்கள் இப்போராட்டங்களின் ஊடாக அரசியல்வாதிகள் தமது செல்வாக்கை வலுப்படுத்திக்கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதனாலேயாகும். இவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயற்படுவதில்லை. அனைத்துப் போராட்டங்களின் பின்னணியிலும் அரசியல்வாதிகள் கலந்திருப்பதுடன். மக்கள் போராட்டம் இறுதியில் சிதைக்கப்படுகின்றது. அதேநேரம் கட்சிகளின் கொள்கைகளின் பின்னால் பயணிப்பவர்கள் மக்களின் போராட்டங்களில் கலந்துகொண்டு தமது சுயநலத்திற்காக தமது எதிர்கால அரசியலை மேலும் இந்நாட்டில் கட்டியெழுப்புவதற்காக மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் மாற்றப்படுகின்றது. இதன் காரணமாகவே மக்களது போராட்டங்கள் அரசினால் கண்டுகொள்ளப்படுவதில்லை. தீர்வுகளை வழங்காமல் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விரோதங்களுக்குள் நியாயமான போராட்டங்கள் சிக்கித்தவிக்கின்றன. இவ்வாறு பின்னணியில் செயற்படுபவர்கள் ஆளுக்கொரு அமைப்புக்களை. சங்கங்களை உருவாக்கி அதன் ஊடாக குட்டையைக் குழப்புகின்ற ஒரு செயல் வடிவத்தையே இவர்களால் ஏற்படுத்த முடிகின்றது. சமூக வலைதளங்களில் தம்மை ஒரு யதார்த்தபூர்வமான அரசியல்வாதிகளாக காண்பிக்கின்ற இவர்கள். இதன் ஊடாக தமது போராட்டங்கள் வெற்றியளிக்கும் என நம்புவது பகற்கனவு.

ஆட்சி மாற்றம் ஒன்று வேண்டும் என்பதற்காக ஏனைய சிங்களத் தரப்புக்கள் முயற்சிக்கின்றன. தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுத் திட்டம் என்ற அடிப்படையில் முஸ்லீம்களுக்கும் ஏற்ற ஒரு தீர்வினை வழங்கவேண்டிய சூழல் அரசிற்கு இருக்கிறது. இந்த நாட்டில் சஹ்ரான் போன்றவர்களின் குண்டுத்தாக்குதலுக்கு முஸ்லீம் அடிப்படைத் தீவிரவாத அமைப்புக்கள் துணைபோயிருப்பதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. போராட்டங்கள் தந்த முடிவு என்ன என்றால் அதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கிறது. முதலாவதாக வடகிழக்கு இணைப்பு. அரசியல் தீர்வுத் திட்டம். கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான ஆர்ப்பாட்டம். நில ஆக்கிரமிப்புக்கானப் போராட்டம் (பௌத்த விகாரைகளை அமைத்தல்). தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கானப் போராட்டம், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் போராட்டம். உரத்திற்காக விவசாயிகளின் போராட்டம் என பல்வேறான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோதும் இதில் ஏதாவதொன்றிற்காவது இந்த அரசாங்கம் தீர்வினைப் பெற்றுத்தந்திருக்கிறது என்றால் எதுவும் இல்லை.

குறிப்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தை வீழ்த்தி இடைக்கால ஆட்சியை மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் கொண்டு வந்தது. இந்த நிலையில் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் அவருடன் இணைந்த பல சட்டத்தரணிகள். உச்சநீதிமன்றில் வழக்குத் தொடுத்து இடைக்கால அரசை கவிழ்த்து அதில் வெற்றியும் கண்டனர். அதனாலேயே குறித்த காலத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த நல்லாட்சி அரசில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும். மாவீரர்களுக்கான அஞ்சலி போன்றவற்றிற்கு அரசு தடையேதும் விதிக்கவில்லை. சுயாதீனமாக அனைத்தும் நடைபெற்றது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இந்நாட்டில் முன்னெடுக்கப்படுமாகவிருந்தால் அது தனித் தமிழீழ இராச்சியத்தை உருவாக்கும் என்கின்ற சிங்கள இனவாதிகளின் போலியான பிரச்சாரத்தின் ஊடாகவே நல்லாட்சி அரசாங்கம் பாரிய வீழ்ச்சியினைக் கண்டது. இதனால் அதிகூடிய வாக்குகள் வித்தியாசத்தில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

தற்போது முஸ்லீம் மக்களும் அரசினால் பழிவாங்கப்படுகின்றனர். முன்னாள் அமைச்சர் றிசாட் அவர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களின் பின்னர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தக் கால எல்லைக்குள் முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களும் ஒரு புஷ்வானமாகவே முடிவடைகின்றது எனலாம். மனித உரிமை மாநாடு. ஐ.நா கூட்டத்தொடர் என அனைத்திலும் அரசு தான் வெற்றி பெற்றுள்ளது. சீனாவுடன் கைகோர்த்துள்ள இலங்கையை அனுசரித்துப்போகவேண்டிய தேவை அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு உள்ளது. இந்தியாவின் புலனாய்வாகச் செயற்படுகின்ற பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணிய சுவாமி இலங்கையுடனான நெருக்கத்தை புதிய வியூகத்தில் நகர்த்தி வருகிறார். அதுபோன்று சீனாவின் ஆக்கிரமிப்பால். முதலீடுகளால் தனது பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்திருக்கும் இலங்கையும் தன்னை எவ்வாறு இதிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என சிந்திக்காமல். ஏனோதானோ என்ற ஆட்சிமுறையினை நடத்திக்கொண்டிருக்கிறது. தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் அனைத்துமே ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துகின்ற போராட்டங்களாக இருக்கின்றவே தவிர. மக்களுக்கான நிரந்தரமான ஒரு தீர்வினை நோக்கி நகரவில்லை என்பதனையே மேல் கூறப்பட்டுள்ள போராட்டங்களின் பயணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.



கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும். வடக்கில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அது தமிழ் அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்கே தெரியாத அளவிற்கு நடத்தப்படுகின்றது. இந்தியாவை எதிர்க்கின்ற எந்தவொரு போராட்டங்களும் இலங்கையில் சாத்தியப்பட்ட வரலாறுகள் இல்லை. மீனவப் போராட்டங்கள் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவை எதிர்ப்பதனால் எந்தவொரு நன்மைகளையும் தமிழ் அரசியற் பரப்பில் பெற முடியாது. அரசியல் வரலாற்றில் இந்தியாவுக்கு எதிரானப் போராட்டங்கள். இலங்கையின் உள்ளூர் ரீதியாக முன்னெடுக்கப்படவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு எதிராகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் ஒரு சந்தேகம் என்னவெனில் மாகாண சபைக்கான தேர்தலையும் இரத்து செய்வது என்பதேயாகும். ஏனைய போராட்டங்கள் இந்த நாட்டில் முன்னெடுக்கப்பட்டபோது கொவிட் பரவலை காரணமாகக்காட்டி நிறுத்தப்பட்டது. ஆனால் விவசாயப் போராட்டமும். மீனவப் போராட்டமும் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் எந்த தடையினையும் விதிக்கவில்லை. ஆகவே இதன் அரசியல் பின்புலத்தை ஆராயவேண்டிய தேவையும் இருக்கிறது. ஆலயங்களில் வழிபாட்டுக்குத் தடைவிதித்து நபர்களை மட்டுப்படுத்தியிருக்கும் அரசினது நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

யூரியாவை வேண்டுமென்று ஒரு தரப்பினரும். யூரியா வேண்டாம் என மறுதரப்பினரும் கோரும் இந்த சூழ்நிலையில். வறுமைக்கோட்டுக்குக் கீழும் தமது விவசாயத்தை முன்னெடுக்கின்ற விவசாயிகள் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். விவசாயிகளின் போராட்டத்தை நியாயமில்லை எனக் கூறும் அரசாங்கம். இயற்கைப் பசளைகளின் ஊடாக விளைச்சலை அடைந்தால் அது உடலில் பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது என்பது அவர்களின் நிலைப்பாடு. ஆனால் போதிய விளைச்சலின்றி இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த யூரியா உரம் இல்லாமையினால் அதன் விளைச்சலில் பாரிய இலாபத்தை அடைய முடியாது என்கிறது மறுதரப்பு. மனிதனது ஆரோக்கியம் முக்கியம். ஆகவே இரசாயன உரத்தை விட இயற்கை உரம் அவசியம் என்பது உண்மை தான். ஆனால் இதுவரை காலமும் இரசாயன உரத்தைப் பயன்படுத்திய விவசாயிகள் திடீரென இயற்கைப் பசளைக்கு மாறுகின்றபோது உடனடியான நன்மைகளைப் பெற முடியாத சூழல் இருக்கிறது. அதாவது இதற்கு ஒரு கால அவகாசம் தேவை என்கின்றனர். இயற்கை உரத்தைக் கொண்டு இலங்கையின் விவசாயத்துறையினை முன்னெடுக்க முடியாது அல்லது வளர்ச்சியை கண்டுகொள்ள முடியாது என்பது ஒரு தூண்டுதல் அரசியலாகவே இதனைக் கருத முடிகிறது. முற்றாக மறுக்க முடியாது. அரசு இம்முறை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

மற்றையது ஆசிரியர் போராட்டம். நாட்டில் என்றுமில்லாதவாறு ஆசிரியர்கள் போராட்டம் தொடர்கின்றது. தொண்டர் ஆசிரியர்களின் நியமனப் பிரச்சினைகள் தொடர்கின்றது. தொண்டர் சுகாதாரப் பணியாளர்களின் நிரந்தர நியமனத்திற்கான ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாட்டு பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் கிடைக்காத நிலையில். தற்போதைய அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக அறிவித்துள்ள இச் சூழலில். அரசிடம் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் ஒதே தடவையில் தீர்ப்பதற்குத் தேவையான நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஏனெனில் இதற்காக பெருமளவிலான நிதி தேவைப்படுகிறது. கொவிட் பரவல் காரணமாக நாட்டினது பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனை சமாளிக்கவே அரசு சர்வதேச நாடுகளிடம். வங்கிகளிடம் என கடன்களைப் பெற்று வருகின்றது. நிச்சயமாக அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் விரைவில் தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கடந்த கால அரசுகள் செய்த தவறு இன்று மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பாதித்துள்ளது. நாட்டின் பாடசாலைகள் திறக்கப்பட்டபோதும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கவில்லை. மாணவர்களின் வருகையும் குறைவடைந்துள்ளது. தற்போதைய இலங்கையில் பொருளாதார நிலையில் அரசால் அவ்வளவு பெரிய நிதியை ஒரே தடவையில் வழங்க இயலாத சூழல் இருக்கிறது என்பதே யதார்த்தம். ஆனால் நடைபெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குமான பேச்சுவார்த்தையில். எதிர்வரும் வரவு செலவுத் திட்டங்களில் சம்பள முரண்பாடுகள் நீக்கப்படும். தீர்வு வழங்கப்படும் என பிரதமர் தெரிவித்திருந்தார்.

அரசினால் தற்போது உடனடியாக இயலாத ஒரு விடயத்தினை எதிர்த்துப் போராடுவதன் ஊடாக எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பது உண்மை. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடாது. ஏற்கனவே கொவிட் நிலைமையின் காரணமாக சுமார் ஒன்றரை வருடங்களாக பாடசாலைகள் இயங்காமல் மூடிவைக்கப்பட்டிருந்தன. குறித்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த காலப்பகுதி விடுமுறையாகவே அமைந்திருந்தது. இக்காலத்தில் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக கல்வி கற்பித்தனர். கவலைதரும் விடயம் என்னவென்றால் இவர்களின் நியாயமானப் போராட்டங்களிலும் அரசியல் கலப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆசிரியர் பணிக்கு வராது இருந்தால். ஆசிரியர்களுக்கு எதிராக மாணவர்களே போராட வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும். இப்போராட்டத்தை ஒருவேளை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடும். ஆகவே இப்போராட்டங்களை எந்த சந்தர்ப்பத்தில் எப்பொழுது நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பற்றியும். போராட்டக்காரர்கள் சிந்திக்கவேண்டும். சில அரசியல் கட்சிகளின் பின்னணியில் இப் போராட்டங்கள் இடம்பெறுகிறது. சுயாதீனமாக அனைவரும் செயற்படவேண்டும். பிளவுகள் வேண்டாம். ஒற்றுமையால் தான் தீர்வினைக் காண முடியும். வலுவானதொரு அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்.

**நெற்றிப்பொறியன்**

# டயஸ்போராக்களை இலக்குவைக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச



இது டயஸ்போராக்களின் காலம். அதாவது புலம்பெயர்ந்த சமூகங்களின் காலம். அல்லது நாடு கடந்து ஒரு தேசமாக அல்லது தேசத்துக்கு வெளியே ஓர் உளவியல் தேசமாக வாழும் மக்களின் காலம். புலப்பெயர்ச்சி என்பது பொதுவாக இரண்டு காரணங்களால் ஏற்படுகிறது. முதலாவது போர். இரண்டாவது பொருளாதார காரணங்கள். ஈழத்தமிழர்களின் புலப்பெயர்ச்சி பிரதானமாக இரண்டு அலைகளை கொண்டது. முதலாவது 1983க்கு முந்தியது. பெருமளவிற்கு கல்வி மற்றும் பொருளாதார காரணங்களுக்கானது. இரண்டாவது 83 ஜூலைக்கு பின்னரானது. அது முழுக்க முழுக்க போரின் விளைவு. எனினும் அதற்குள் போரை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு பொருளாதார காரணங்களுக்காக புலம் பெயர்ந்தவர்களும் உண்டு.

உலகில் இன்று மிகக் கவர்ச்சியான டயஸ்போராக்களில் ஒன்றாக தமிழ் டயஸ்போரா பார்க்கப்படுகிறது. மனிதகுலத்தின் மீது அதிக தாக்கத்தை செலுத்தியது யூத டயஸ்போராதான். வரலாற்றில் மிக நீண்ட காலத்துக்குரியதும் யூத டயஸ்போராதான். டயஸ்போரா என்ற வார்த்தை யூதர்களுக்குத்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான ஒரு புலப்பெயர்ச்சி அது. அதன் விளைவாக யூதர்கள் அதிகமதிகம் ஐரோப்பியமயப்பட்டார்கள். யூத டயஸ்போரா என்பது கிறிஸ்துவுக்கு முன்னரே தொடங்கியது. இரண்டாம் உலக மகா யுத்தம் வரையிலும் நீடித்திருந்தது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அதாவது இரண்டு மில்லியன்களுக்கும் மேலாக யூதர்கள் புலம்பெயர்ந்தார்கள். ஆசியாவில் தோன்றிய யூதர்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலப்பகுதிக்குள் அதிகம் ஐரோப்பியமயப்பட்டார்கள். இவ்வாறு யூதர்கள் ஐரோப்பியமயப்பட்டதன் விளைவுகள்தான் அணுகுண்டு மார்க்சிசம் சிக்மன் பிராய்டின் உளவியல் கோட்பாடு முதற்கொண்டு உலகின் ஒரு தொகுதி அறிவியல் சாதனைகள் ஆகும். இந்த அர்த்தத்தில்தான் கடந்த நூற்றாண்டை யூதர்களின் நூற்றாண்டு என்று வரலாற்றாசிரியர்கள் வர்ணிப்பதுண்டு.

ஒரு டயஸ்போரா தனது தாய் நிலத்தில் ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதனை யூதர்கள் கடந்த நூற்றாண்டில் நிரூபித்தார்கள். யூத டயஸ்போராவிலிருந்து தொடங்கி மனிதகுல வரலாற்றில் டயஸ்போராக்களின் காலம் என்பது துலக்கமான விதங்களில் மேலெழுந்துவிட்டது. ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளை பொறுத்தவரையிலும் பல நாடுகளில் டயஸ்போரா சமுகங்கள் தத்தமது தாயகங்களில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் செல்வாக்கு செலுத்தும் ஒரு போக்கு வளர்ச்சியுற்று வருவதை காணலாம். ஈழத்தமிழர்களின் மத்தியிலும் தாயகத்தில் அரசியல், சமூக, கலை பண்பாட்டுச் செயற்பாடுகளின் மீது டயஸ்போராவின் தாக்கம் நிர்ணயகரமானதாகக் காணப்படுகிறது.

குறிப்பாக 2009க்கு பின் தமிழ் அரசியலின் மையம் தமிழ் டயஸ்போராவா? என்று மயங்கும் அளவுக்கு நிலைமைகள் வளர்ந்துவிட்டன. போரில் தோற்கடிக்கப்பட்ட பின் தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கு உளவியல் ரீதியாகவும் நிதி ரீதியாகவும் தெம்பூட்டியது தமிழ் டயஸ்போராதான். 2009க்கு பின் தோல்வியை ஒப்புக்கொள்ளாத தமிழ் கூட்டு உளவியலின் கூர்முனையாக தமிழ் டயஸ்போரா தன்னைத் தொடர்ச்சியாக முன்னிறுத்தி வருகிறது. மிகச் சில தசாப்தங்களுக்குள் நிகழ்ந்த ஒரு வளர்ச்சி இது.

இந்த வளர்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு இங்கே ஒரு உதாரணத்தைக் கூறலாம். 83 ஜூலைக்கு முன்பு பிரித்தானிய விமான நிலையம் ஒன்றில் நடந்த சம்பவம் அது. பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்படுவதற்காக ஒரு தொகுதி ஈழத்தமிழர்கள் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்கள். தாங்கள் நாடு கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக அவர்கள் திடீரெண்டு விமான நிலையத்தில் தங்களுடைய ஆடைகளை அகற்றி அரை நிர்வாணமாக நின்று தமது எதிர்ப்பை காட்டினார்கள். அதன் விளைவாக அவர்களை நாடு கடத்தும் முயற்சி நிறுத்தப்பட்டது. ஆனால் அப்படி ஒரு காட்சியை இனி எந்த ஒரு அமெரிக்க அல்லது ஐரோப்பிய விமான நிலையத்திலும் கற்பனை செய்ய முடியாது. ஏனென்றால் அன்று பிரித்தானியாவின் விமான நிலையத்தில் நிர்வாணமாக நின்றவர்களுக்கு தங்களை மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற கூச்சம் இருக்கவில்லை. அதாவது அங்கே அவர்களுக்கு ஒரு சமூக இருப்போ கலாச்சார இருப்போ இருக்கவில்லை. ஒரு சமூக அல்லது கலாச்சார இருப்பு அல்லது அந்தஸ்து இருந்தால்தான் வெட்கம் வரும். மற்றவர்கள் தங்களை பார்ப்பார்கள் மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற வெட்கம் ஏற்படும். ஆனால் அன்றைக்கு நிர்வாணமாக நின்ற தமிழர்கள் உதிரிகளாக நின்றார்கள். ஒரு சமூகமாக நிற்கவில்லை.

ஆனால் இன்றைக்கு ஈழத் தமிழர்களின் நிலை அப்படியல்ல. அப்படி எந்த ஒரு விமான நிலையத்திலும் நிர்வாணமாக நிற்க முடியாது. ஏனென்றால் ஒரு புலம் பெயர் தமிழர் அவ்வாறு நின்றால் அதை அவருடைய அடுத்த தலைமுறை அனுமதிக்காது அல்லது அந்தப் பிள்ளையின் பிள்ளை அனுமதிக்காது. அந்தப் பிள்ளைகளுக்கு அங்கே ஒரு சமூக அடையாளமும் அந்தஸ்தும் உண்டு. அவர்கள் அந்த சமூகத்துக்குரியவர்கள். உன்னுடைய பெற்றோர் அல்லது உறவினர்கள் இப்படி நிர்வாணமாக நிற்கிறார்கள் என்று நாளைக்கு அவர்களுடைய பள்ளிக்கூடத்திலோ அல்லது வேலைத்தளங்களிலோ அந்தப் பிள்ளைகளின் நண்பர்கள் சொல்லிக்காட்டுவார்கள். மேலும், பெரும்பாலான விமான நிலையங்களில் ஈழத்தமிழர்கள் ஏதோ ஒரு வேலை பார்க்கிறார்கள். தவிர அந்த விமான நிலையங்களில் வந்து போகும் பயணிகளில் யாரோ ஒரு அல்லது பல முதல் தலைமுறை அல்லது இரண்டாம் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் இருப்பார்.

அதாவது ஈழத்தமிழர்கள் இப்பொழுது நாட்டுக்கு வெளியே ஒரு சமூகமாக, தேசமாக பரந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தேர்தலில் நிற்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருகிறார்கள். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக வருகிறார்கள். உள்ளூர் பிரமுகர்களாக வந்துவிட்டார்கள். உலகப் பிரபலங்கள் ஆகவும் வந்துவிட்டார்கள். இதற்கு ஆகப் பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு காட்டலாம். தமிழ்நாட்டின் திரைத்துறை தலைநகரமாகிய கோடம்பாக்கத்தில் நடந்த ஒரு சம்பவம். நகைச்சுவை நடிகர் வடிவேலு இயக்குனர் ஒருவரோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நடிப்பதில் இருந்து விலகி இருந்தார். அந்தப் பிணக்கை தீர்த்து வைத்தது ஒரு புலம்பெயர் பெருவணிகர்தான். தமிழ் திரை உலகின் மீது புலம்பெயர் சமூகத்தின் செல்வாக்கை இது காட்டுகிறதா?

1990க்குப் பின் தமிழ் டயஸ்போராவானது ஈழ விடுதலைப் போரின் காசு காய்க்கும் மரமாக மாறியது. குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் ஆயுதப் போராட்டத்துக்கும் இடையே சட்டப்பூட்டு ஏற்பட்ட பொழுது ஆயுதப்போராட்டம் ஐரோப்பாவை நோக்கி நிச்சயமற்ற கடல் வழிகளின் ஊடாகத் திறக்கப்பட்டது. அதிலிருந்து அதிகரித்த அளவில் ஈழப்போராட்டம் மேற்குமயப்பட்டது. ஈழப்போராட்டத்தின் காசு காய்க்கும் மரமாக தமிழ் டயஸ்போராக் காணப்பட்டது. இன்றும் தாயகத்திலுள்ள கட்சிகள் செயற்பாட்டாளர்களின் மீது ஏதோ ஒரு விதத்தில் தமிழ் டயஸ்போரா தாக்கம் செலுத்துகிறது.

குறிப்பாக 2009க்குப் பின் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து நீதிக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவது தமிழ் டயஸ்போராதான். 2009க்கு பின் தாயகத்தில் காணப்பட்ட அச்சச்சூழல் காரணமாக தமிழ் டயஸ்போராவிடமே போராட்டத்தின் அஞ்சலோட்டக் கோல் ஒப்படைக்கப்பட்டதாக ஒரு தோற்றம் நிலவியது. குறிப்பாக ஜெனிவா மைய அரசியலில் மிகவும் வினைத்திறனோடு செயற்படுவது டயஸ்போராதான்.

இவ்வாறான ஒரு முக்கியத்துவத்தைக் கருதித்தான் கடந்த வாரம் இலங்கைத் தீவின் ஜனாதிபதி அமெரிக்காவில் வைத்து தமிழ் டயஸ்போராவை நோக்கி அழைப்பு விடும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. அண்மையில் ஐ.நா கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அங்கே பொதுச் செயலரை சந்தித்தபின் வெளியிட்ட கருத்துக்கள் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன. ஜனாதிபதி அமெரிக்காவில் நின்ற நாட்களுக்கு சற்று முன்பின்னாக நோர்வேயில் ஒரு தமிழ்ப்பெண்ணான ஹம்சாயினி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருப்பதையும், கனடாவில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஹரி ஆனந்தசங்கரி மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டவேண்டும்.

தமிழ் டயஸ்போரா ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகவும் அழுத்தப் பிரயோக சக்தியாகவும் காசு காய்க்கும் மரமாகவும் தாயகத்தில் கட்சி அரசியல் மற்றும் செயல்வாத நடவடிக்கைகளில் நிர்ணயகரமான செல்வாக்கைச் செலுத்தும் ஒரு சூழலில் உலகப் பேரரசு ஒன்றின் தலைநகரிலிருந்து ஜனாதிபதி அந்த அழைப்பை விடுத்திருக்கிறார். டயஸ்போராவை கையாண்டால் நிலைமையை குறிப்பிடத்தக்க அளவுக்கு சமாளிக்கலாம் என்று ஒரு முடிவுக்கு அரசாங்கம் வந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆனால் இந்த அரசாங்கம் தான் சில மாதங்களுக்கு முன்பு டயஸ்போரா அமைப்புக்களையும் நபர்களையும் தடைசெய்தது. அவ்வாறு தடை செய்யப்பட்ட நபர்களும் அமைப்புகளும் ஏற்கனவே முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் தடை நீக்கப்பட்டவர்களே. அவர்களை தடையை நீக்கிய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மேற்கத்தைய நாடுகளுடன் இணைந்து தமிழ் டயஸ்போராவை வசப்படுத்த முயற்சித்தது. அதன் மூலம் தமிழ் டயஸ்போராவில் பிரிவினைகளையும் ஏற்படுத்தியது. ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களால் பிரித்தாளும் தந்திரம் மிக்க ஒருவராக பார்க்கப்படுகிறார்.

||ஆம் பக்கம் பார்க்க...

**நிலாந்தன்**

# புதிய அரசியல் யாப்பும் இலங்கை அரசின் கபட நாடகங்களும்

ஒரு புதிய யாப்பை இந்த ஆண்டின் இறுதிக்குள் கொண்டு வரப்போவதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருக்கிறார். இலங்கை ராணுவத்தின் 72வது ஆண்டு நிறைவையொட்டி அனுராதபுரத்தில் உள்ள ஒரு படை முகாமில் நடந்த ஒரு வைபவத்தில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இது அரசாங்கம் அதன் யாப்புருவாக்க முயற்சியில் மெய்யாகவே ஈடுபடுகிறதா என்ற கேள்வியை மேலும் வலிமைப் படுத்தியிருக்கிறது.

யாப்புருவாக்கத்திற்கான நிபுணர் குழுவை சேர்ந்த ஒருவர் கூட்டமைப் பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவரிடம் தெரிவித்த தகவல்களின் அடிப் படையில் ஒரு புதிய யாப்புக்கான சட்ட வரைபை அரசாங்கம் தயாரித்து வருவதாக கூறப்படுகிறது. அதை நம்பித்தான் சம்பந்தர் அண்மைக் காலங்களில் ஒரு புதிய யாப்பு உருவாக் கப்படும் என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்து வருகிறாரோ தெரியவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதி களோடு பேசியபொழுது சம்பந்தர் ஒரு புதிய யாப்பு உருவாக இருப்பது குறித்து கருத்து தெரிவித்திருந்தார்.

அதன்பின் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு வர இருந்த பின்னணியில் சம்பந்தர் பங்காளிக் கட்சிகளை நோக்கி ஓர் அறிக்கை விட்டிருந்தார். அந்த அறிக்கையில் கூட்டமைப்பின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்று அழைப்பு விட்டிருந்ததோடு ஒரு புதிய யாப்பு உருவாகவிருக்கும் சூழலில் கூட்டமைப்பின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்படவும் கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஒரு புதிய யாப்பைக் குறித்த கருத்துக்களை அவர் இந்திய வெளியுறவுச் செயலரைச் சந்திக்கும் போது கூறுவதைத் தவிர்ப்பது நல்லது என்று பங்காளிக் கட்சிகள் கருதியதாக தெரிகிறது. மாறாக சந்திப்பின்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று வெளியுறவுச் செயலரிடம் கேட்கவேண்டும் என்று ஒரு பங்காளி கட்சி சம்பந்தருக்கு வலியுறுத்தியதாக தெரிகிறது. சந்திப்பின்போது மேற்படி பங்காளிக் கட்சியின் தலைவர் அதனை தொடக்கத்திலேயே வெளியுறவுச் செயலரை நோக்கி ஒரு வேண்டுகோளாக முன்வைத்ததாகவும் அறிய முடிகிறது. இந்திய வெளியுறவுச் செயலரின் நிலைப்பாடும் அதுவாக இருந்த காரணத்தால் உரையாடலில் அந்த விடயம் பேசப்பட்டிருக்கிறது. எனினும் உரையாடலின் போக்கில் சம்பந்தர் ஒரு புதிய யாப்பை குறித்தும் கருத்து கூறியதாக அறிய முடிகிறது.

பல மாதங்களுக்கு முன்பு கூட்டமைப்பினர் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தபோதும் இது குறித்து அவர் வலியுறுத்தியதாக தெரிகிறது. ஒரு புதிய யாப்பை உருவாக்கும் பொழுது 13வது திருத்தம் என்ற பேச்சு எழப்போவதில்லை. அப்புதிய யாப்பிற்குள் 13ஆவது திருத்தத்தின் முழு அளவு உள்ளடக்கமும் இணைக்கப்படுமாயிருந்தால் பிரச்சினை இல்லை. மாறாக 13ஆவது திருத்தத்தை விடக் குறைவான அதிகாரங்களே அதில் இருந்தால் அதைக் குறித்து இந்தியா அழுத்தம் எதையும் பிரயோகிப்பது கடினமாக இருக்கும். ஏனென்றால் ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது இலங்கைதீவில் உள்நாட்டு விவகாரம். அதேசமயம் 13வது திருத்தம் என்பது இந்திய - இலங்கை உடன்படிக்கையின் விளைவு. அதனால் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா அதில் தலையிடமுடியும் என்ற தொனிப்பட ஜெய்சங்கர் கூட்டமைப்பிடம் கருத்துத் தெரிவித்ததாக தெரிகிறது. எனினும் கடந்த 12ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியா இலங்கையை வற்புறுத்தவில்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்டிட வேண்டும்.

ஜெய்சங்கரைச் சந்தித்த பின்னரும் சம்பந்தர் ஒரு புதிய யாப்பைக் குறித்து பேசுமளவுக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று அழுத்தமாகப் பேசுவதாகத் தெரியவில்லை. இந்தியாவின் அழுத்தத்தோடு ஒரு தீர்வைப் பெற முயற்சித்தால் அது சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளும் என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது. சிங்கள மக்களை பயமுறுத்தாமல் ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் இந்திய அழுத்தம் என்ற விவகாரம் ஒரு புதிய யாப்புருவாக்க முயற்சியில் ஒரு விவகாரமாக இருக்கக்கூடாது என்று சம்பந்தர் கருதுகிறாரோ தெரியவில்லை.

கடந்த வாரம் ஜனாதிபதி அனுராதபுரத்தில் வைத்து ஆற்றிய உரை சம்பந்தரின் நம்பிக்கையை பதப்படுத்தக்கூடும். கடந்த ஜெனிவா கூட்டத்தொடரின்போது அரசாங்கம் கொழும்பிலுள்ள தூதரகங்களுக்கும் ஐநாவுக்கும் அனுப்பிய அறிக்கையில் நிலைமாறுகால நீதி செய்முறைகளை ரணில் விக்கிரமசிங்க விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து தான் முன்னெடுப்பதாக ஒரு தோற்றத்தை காட்டியிருந்தது. அத்தோற்றத்தை மேலும் பலப்படுத்த வேண்டுமாக இருந்தால் ஒரு புதிய யாப்பைக் குறித்தும் பேச வேண்டியுள்ளது. ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் ஒரு புதிய யாப்பை எந்த அடிப் படையில் உருவாக்குவது? என்பதுதான்.

அண்மையில் இந்து பத்திரிகைக்கு பேட்டியளித்த மிலிந்த மொரகொட கூறுவது போல அது இந்தியாவின் உதவியோடு கூடிய ஒரு உள்நாட்டுத் தயாரிப்பாக இருக்க முடியுமா? இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் பிராந்திய மயப்பட்டு விட்டன. அனைத்துலக மயப்பட்டுவிட்டன. திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் அதன்பின் ஜெனிவா வரையிலும் அதுபோய்விட்டது. எனவே அதற்கு உள்நாட்டு தீர்வு கிடையாது. இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் காண்பது என்றால் ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணையோடு கூடிய ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே எழுதப்பட வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவின் யாப்புருவாக்க குழுவிற்கு தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த முன்மொழிவில் இது கூறப்பட்டுள்ளது.அவ்வாறு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தோடு ஒரு சமாதான உடன்படிக்கை எழுதப்பட்ட பின்னரே அந்த உடன்படிக்கையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களை ஒரு சட்டக்கட்டமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கத்தோடு ஒரு யாப்பை வரைய வேண்டும். மாறாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுக்க முழுக்க ஒரு யாப்புருவாக்க முயற்சியாகக் குறுக்கக்கூடாது.

ரணில் விக்ரமசிங்கவின் யாப்புருவாக்க முயற்சிகளில் இந்த இரண்டு அம்சங்களில் ஒன்றாகிய மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் என்ற அம்சம் ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் 30/1 தீர்மானமானது நிலைமாறுகால நீதிக்குரியது. நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின் கீழ் ஒரு தீர்வைக் காணும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டது. யாப்புருவாக்கத்திற்காக வழிநடத்தற் குழுவும் உபகுழுக்களும் உருவாக்கப்பட்டு ஒரு யாப்புக்கான இடைக்கால வரைபுவரை அது முன்னேறியது.




ரணில் விக்கிரமசிங்கவின் தீர்வுக்கான முயற்சிகளை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அவர் ஒரு விடயத்தை ஒப்பீட்டளவில் செய்ய முற்பட்டார். அது என்னவெனில் யாப்புருவாக்க முயற்சி என்பது பொறுப்புகூறலின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்பதே அது. அதேசமயம் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்போடு சேர்ந்து வேறு ஒரு தந்திரத்தையும் செய்தார். என்னவெனில். நீதி விசாரணைகளில் இருந்து தீர்வுக்கான முயற்சிகளைப் பிரித்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நீதி விசாரணையையும் வேறு வேறு ஆக்கினார்.

இப்பொழுது கோட்டாபய அதன் அடுத்த கட்டத்துக்கு போக முயற்சிக்கிறாரா?அவர் யாப்புருவாக்க முயற்சிகளை பொறுப்புக்கூறலில் இருந்து பிரிக்க முயற்சிக்கிறார்.

ஒரு புதிய யாப்பு ஏன் தேவைப் படுகிறது? பழைய யாப்பு பிரச்சினைகளை தீர்க்க தவறிவிட்டது என்பதனால்தானே? பழைய யாப்பு ஏன் பிரச்சினைகளை தீர்க்க தவறியது? எனென்றால் பழைய யாப்பு நாட்டின் பல்லினத் தன்மையை பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதால்தான். அப்படி என்றால் ஒரு புதிய யாப்பு இலங்கை தீவின் பல்லினத் தன்மையை பாதுகாக்கும் நோக்கிலானதாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால் தன்னை தனிச் சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் வெற்றி பெற்றதாக காட்டிக் கொள்ளும் ஓர் அரசாங்கம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமா? தனிச் சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற வெற்றிக் கோஷம் பல்லினத்தன்மைக்கு எதிரானது. நல்லிணக்கத்துக்கு எதிரானது. நிலைமாறுகால நீதிக்கு எதிரானது. ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்படமுடியாத ஒரு பகுதியாக அமைய வேண்டும். ஆனால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியாத ஒரு அரசாங்கம் எப்படி அப்படிப்பட்ட ஒரு யாப்பை உருவாக்க முடியும்? இதுதான் பிரதான கேள்வி.

மிகக்குறிப்பாக. ஐநாவில் வெளியக பொறிமுறையை இந்த அரசாங்கம் நிராகரிக்கிறது. உள்ளகப் பொறிமுறையைத்தான் வலியுறுத்துகிறது. இந்தியாவுக்கான புதிய தூதுவர் மிலிந்த மொரகொட இனப்பிரச்சினைக்கு தீர்வாக உள்ளூர் தயாரிப்பான ஒரு தீர்வை தான் மனதில் வைத்திருப்பதாக தெரிகிறது. அப்படி என்றால் ராஜபக்சக்கள் உள்ளகப் பொறிமுறை. உள்நாட்டு விசாரணை. உள்நாட்டுத் தயாரிப்பான ஒரு தீர்வு என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே தொகுத்துப் பார்த்தால் நமக்கு கிடைக்கும் சித்திரம் தெளிவானது.

இந்த அரசாங்கம் பொறுப்புக் கூறல். இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற எல்லாவற்றையும் அனைத்துலகமய நீக்கம் செய்வதற்கு அல்லது பிராந்தியமய நீக்கம் செய்வதற்கு முயற்சிக்கின்றதா? அவ்வாறு நல்லிணக்கத்தை. பொறுப்புக்கூறலை. இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியாரின் தலையீடுகள் அற்ற உள்நாட்டு வடிவிலானதாக மாற்றுவது என்பது இறுதியிலும் இறுதியாக தமிழ் மக்களை தனிமைப்படுத்தும் ஒரு உத்திதான். அவ்வாறு பொறுப்புக்கூறலை உள்நாட்டுக்குள் குறுக்கும் ஒரு உத்திக்கு கூட்டமைப்பும் உடந்தையாக இருக்கக்கூடாது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கருதுவதாக தெரிகிறது.

மேலும். அண்மையில் ஐநாவுக்கு ஒன்றாகக் கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளும் அவ்வாறே சிந்திப்பதாக தெரிகிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதனை சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு முன் நிபந்தனையாக முன்வைக்க வேண்டும் என்று அவை கேட்கின்றன. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே நம்பிக்கைகளை கட்டியெழுப்புவதற்கான ஒரு நிபந்தனையாக 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று மேற்படி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அப்படி ஒரு முன்நிபந்தனையை முன்வைத்தால் அது இந்தியாவையும் இது விடயத்தில் பொறுப்புக்கூற வைக்கும் என்று பங்காளிக் கட்சிகள் கருதுகின்றன. 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று தமிழ்த்தரப்பு கோரிக்கை வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர் பார்ப்பதாக தெரிகிறது. இதுவிடயத்தில் தமிழ்த் தரப்பு அதற்காக உழைத்தால்தான் இந்தியாவும் சேர்ந்து செயல்படலாம் என்ற தொனிப்பட இந்திய வெளியுறவுச் செயலர் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. சம்பந்தர் அதற்கு உடன்பாடு தெரிவித்ததாகவும் தெரிகிறது. ஆனால் அதே சமயம் ஒரு புதிய யாப்பைக் குறித்த கற்பனைகளும் அவரிடம் இருப்பதாகத் தெரிகிறது.

**நெற்றிப்பொறியன்**

# தமிழர்களுக்கானத் தீர்வு சர்வதேச நீதிமன்றில் கிடைப்பதிலும் பாரிய சிக்கல் இருக்கிறது




கடந்தஜெனிவாக்கூட்டத்தொடரையொட்டி தமிழ் அரசியல் வட்டாரங்கள் வழமைக்கு மாறாக முன்கூட்டியே நொதிக்கத் தொடங்கிவிட்டன. வழமையாக பெப்ரவரி மாதமளவிற்தான் நாட்டில் ஜெனிவாவை நோக்கிய ஒரு நொதிப்புண்டாகும்.ஆனால் இம்முறை சற்று முன்னதாகவே அது தொடங்கியிருந்தது. அதற்கு காரணங்களில் ஒன்று கடந்த மாதமொன்றில் அமெரிக்க தமிழ் அமைப்பு ஒன்றினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மெய்நிகர் சந்திப்பில் சுமந்திரன் கூறிய "ரோல் ஓவர் பிரேரணை" என்ற சொற்பிரயோகம்தான். அச்சந்திப்பில் அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடரையொட்டிக் கருத்துக் கூறும்போது அவர் அந்த வார்த்தையைப் பிரயோகித்திருந்தார். அதன்படி ஏற்கனவே உள்ள தீர்மானத்தை கூட்டமைப்பு மாற்றமின்றி கொண்டு வர முயற்சிக்கிறதா? என்ற சந்தேகம் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மத்தியில் தோன்றியது.

அச்சந்தேகத்தை பலப்படுத்துவது போல சுமந்திரன் ஒரு கொன்செப்ற் பேப்பரை விக்னேஸ்வரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் வழங்கியிருந்தார். ஐநா கூட்டத்தொடரை தமிழ்த் தரப்பு ஒற்றுமையாக அணுக வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த கொன்செப்ற் பேப்பர் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் அந்த கொன்செப்ற் பேப்பரை கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வரனும் நிராகரித்துவிட்டார்கள். இது ஜெனிவாவை முன்னோக்கி தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைப்பதில் இருக்கக்கூடிய சவால்களை உணர்த்தியது.

அண்மைய காலங்களில் சுமந்திரன் கொழும்பில் இருக்கும் பிரித்தானிய தூதரையும் அமெரிக்கத் தூதுவரையும் சந்தித்ததும் சந்திப்புக்கு பின்னர் பத்திரிகைகளில் வந்த செய்திகளும் இந்த பரபரப்புக்கு மேலும் ஒரு காரணம். தமிழ்த் தரப்பில் ஜெனிவாவைக் கையாள்வது சுமந்திரன் தான் என்ற ஒரு மயக்கத்தை இது உருவாக்கியது. அது காரணமாக வழமைபோல சுமந்திரன் தனியோட்டம் ஓட முயற்சிக்கிறார் என்ற கருத்து பரவலாக உருவாக்கப்பட்டது மட்டுமல்ல. சுமந்திரன் ஒரு இரகசிய நிகழ்ச்சி நிரலின் கருவியா என்ற சந்தேகத்தையும் பரவலாக ஏற்படுத்தியது. இதனால் வழமைபோல சுமந்திரனுக்கு எதிராக பரவலான ஒரு கருத்துருவாக்கம் ஏற்பட்டது.

ஆனால் இது விடயத்தில் மனித உரிமைப் பேரவையை அதாவது ஜெனிவாவை சரியாக விளங்கிக் கொள்ளும்போது இதில் சுமந்திரன் ஒரு கருவி மட்டுமே என்பது தெரியவரும். அவர் ஓர் அரச தரப்பின் பிரதிநிதி அல்ல. ஒரு அரசற்ற தரப்பின் பிரதிநிதி. அவர் விரும்பி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர முடியாது. அல்லது தீர்மானத்தில் பெரிய மாற்றங்களைச் செய்யவும் முடியாது. தீர்மானத்துக்கு கால அவகாசத்தை வழங்கவும் முடியாது. ஏனெனில் ஜெனிவா எனப்படுவது அரசுகளின் அரங்கம். அங்கே முடிவுகளை அரசுகள்தான் எடுக்கின்றன. இதில் அந்த முடிவுக்கு எதிராக தமிழ் மக்கள் திரள்வதைத் தடுக்க அல்லது அந்த முடிவுகள் தொடர்பில் தமிழ் மக்களின் கருத் துக்களைத் திரட்டும் விதத்தில் சுமந்திரனை இணை அனுசரணை நாடுகள் ஒரு கருவியாக வேண்டுமானால் பயன்படுத்தலாம். ஆனால் தனி ஒரு சுமந்திரனால் தீர்மானத்தில் அல்லது ஐநாவின் நடவடிக்கைகளில் திருப்பகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

எனவே ஜெனிவாவைக் கையாள்வது என்பதில் சுமந்திரனைக் கையாள்வது என்பது ஒரு சிறிய பகுதி மட்டுமே. அவர் தனியோட்டம் ஓடாமல் தடுத்தால் போதும். அதற்கும் அப்பால் ஜெனிவாவை கையாள்வது என்பது பல்பரிமாணங்களைக் கொண்டது.

ஐநா மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஒரு நீதிமன்றம் அல்ல. வேண்டுமானால் இணக்கசபை என்று சொல்லலாம். அது நாடுகளை தண்டிக்கும் அதிகாரம் அற்றது. குறைந்தபட்சம் நாடுகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தில் தடை விதிக்கவும் அதனால் முடியாது. எனவே தமிழ்த் தரப்பு ஜெனிவாவில் தமக்கிருக்கும் வரையறைகளை விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் எனப்படுவது நிலைமாறுகால நீதிக்குரியது. நிலைமாறுகால நீதி எனப்படுவது உலக சமூகம் தமிழ் மக்களுக்கு வழங்கிய நீதி. நிலைமாறுகால நீதியின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நூரேம்பேர்க் தீர்ப்பாயத்தில் தொடங்கி அண்மைக்கால கம்பூச்சிய விசேஷ தீர்ப்பாயம் வரையிலும் நிலைமாறுகால நீதி எனப்படுவது தோற்றவர்களைத்தான் விசாரித்திருக்கிறது. வெற்றி பெற்றவர்களை விசாரிக்கவில்லை. இலங்கை தீவில் ஆட்சியில் இருப்பவர்கள் ஒன்றில் போரில் வென்றவர்கள் அல்லது அவர்களைப் பாதுகாக்கும் ரணிலைப் போன்றவர்கள். எனவே அவர்களை விசாரிக்க இந்த உலகம் தயாரில்லை. எனவே நிலைமாறுகால நீதி எனப்படுவது அனைத்துலக சமூகத்தின் இயலாமையின் விளைவு என்றும் கூறலாம்.

அந்த நிலைமாறுகால நீதியைக்கூட ராஜபக்சக்கள் ஐநா பரிந்துரைக்கும் படிவத்தில் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. அவர்கள் ஐநாவின் தீர்மானத்துக்கு வழங்கிய அனுசரணையிலிருந்து விலகப்போவதாகக் கூறிவிட்டார்கள். எனினும் கடந்த ஓராண்டு கால ராஜபக்சவின் ஆட்சியில் அவர்கள் ஐநாவுக்கு துலக்கமான ஒரு சமிக்ஞையைக் காட்டியிருக்கிறார்கள். அது என்னவெனில் ஐநா பரிந்துரைத்த வடிவத்தில் நல்லிணக்கப் பொறிமுறையை ஏற்றுக் கொள்ள மாட்டோம் ஆனால் ராஜபக்சக்கள் பாணியிலான ஒரு நல்லிணக்க பொறிமுறைக்கு தயார் என்பதே அந்த செய்தி.

ஏனெனில் நிலைமாறுகால நீதியின் கீழ் ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப்பட்ட காணாமல் போனவர்களுக்கான அலுவலகம். இழப்பீட்டு நீதிக்கான அலுவலகம். சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கான அலுவலகம் போன்றவற்றை அரசாங்கம் தொடர்ந்தும் பேணுகிறது. அதோடு நிலைமாறுகால நீதியின் நான்காவது தூண் என்று வர்ணிக்கப்படும் மீள நிகழாமைக்குக் கீழ் கட்டமைப்பு சார் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அதற்குத்தான் அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்கப் போவதாக ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்பி வருகிறது. எனவே பொறுப்புக்கூறலுக்கான ராஜபக்ச பாணியிலான உள்நாட்டுப் பொறிமுறையை இணை அனுசரணை நாடுகள் எப்படிப் பார்க்கின்றன என்பது இங்கு முக்கியம்.

சீன சார்பு ராஜபக்சக்கள் முற்றாக தங்கள் பிடிக்குள்ளிருந்து வெளியேறுவதை விடவும் அவர்களை எப்படியாவது தமது பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் சிந்தித்தால் மஹிந்தவின் காலத்தில் செய்ததைப் போல அரசாங்கத்துக்கு நோகாத எதிர்த் தீர்மானங்களை நிறைவேற்றலாம். அல்லது இருக்கின்ற தீர்மானங்களை மாற்றலாம் அல்லது கால அவகாசத்தை வழங்கலாம். எதைச் செய்தாலும் அரசாங்கத்தை முற்றாக எதிர் நிலைக்குத் தள்ளினால் அது சீனாவுக்கு வாய்ப்பாக அமையலாம் என்ற முன்னெச்சரிக்கையோடுதான் இணை அனுசரணை நாடுகள் சிந்திக்கும். இது தான் ஜெனிவா.

எனினும் கடந்த முறை அரசாங்கத்துக்கு பாதகமான ஒரு போக்கு இணை அனுசரணை நாடுகளின் மத்தியில் காணப்பட்டதாக ஒரு அவதானிப்பு உண்டு. எப்படியென்றால் அமெரிக்காவின் மிலேனியம் சலேஞ்ச் நிதி உதவி திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அண்மையில் அமெரிக்கா அத்திட்டத்திலிருந்து பின்வாங்கிவிட்டது. அது போலவே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிக்கும் பணிகளை இந்தியாவிடம் தரப்போவதாக முதலில் ராஜபக்சக்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இன்றுவரையிலும் அது செயலுருப்பெறவில்லை. துறைமுக ஊழியர் தொழிற்சங்கங்கள் அதற்கு எதிர்ப்பு காட்டுவதாக ஒரு சாட்டை அரசாங்கம் கூறி வந்தது. எனவே அரசாங்கத்தின் மீது ஏதோ ஒரு விதத்தில் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கும் உண்டு. இந்தியாவுக்கும் உண்டு. இதைச் சாதகமாகக் கையாள்வதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிராக தீர்மானங்களைக் கொண்டு வரலாம் என்று புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் ஒரு பகுதி நம்பியது. இந்த நம்பிக்கைகளைப் பலப்படுத்துவது போல கொழும்பில் இருக்கும் அமெரிக்க தூதுவரும் பிரிட்டிஷ் தூதுவரும் சுமந்திரனுக்குத் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

இப்படிப்பட்டதொரு பின்னணியில் ஜெனிவாவுக்கு வெளியே தமிழர்களின் விவகாரத்தை ஐநாவின் ஏனைய பெரிய சபைகளான பொதுச்சபை. பாதுகாப்புச் சபை போன்றவற்றுக்கு கொண்டு போவது என்று சொன்னால் அங்கேயும் பிரச்சினைகள் உண்டு.மனித உரிமைப் பேரவைக்குள் இருக்கும் நாடுகள் வாக்களிப்பதன் மூலம் அதைச் செய்யலாமா என்ற கேள்வி இங்கு முக்கியம். ஏனெனில் மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்துக்கு பலமான நண்பர்கள் உண்டு. சீனா. ரஷ்யா. கியூபா போன்ற நாடுகளே அவை. எனவே விவகாரத்தை ஐநாவின் ஏனைய சபைகளுக்குக் கொண்டுபோவது என்று சொன்னால் ஒரு பலமான நாடு தமிழர்களுக்குச் சார்பாக விவகாரத்தை முன்னெடுக்க வேண்டியிருக்கும். அல்லது உலகப்பொது நிறுவனங்களான அரசு சார்பற்ற நிறுவனங்களும் ஐநாவின் உப நிறுவனங்களாகக் காணப்படும் உலகப் பொது நிறுவனங்களும் உலக பொது நிதி உதவி நிறுவனங்களாகிய உலக வங்கி. அனைத்துலக நாணய நிதியம் போன்ற அமைப்புகளும் இணைந்து விவகாரத்தை பொதுச்சபை அல்லது பாதுகாப்புச் சபைக்கு கொண்டு போகவேண்டும் என்று கேட்க வேண்டும்.

இவ்வாறான வாய்ப்புகளுக்கூடாகத்தான் விவகாரத்தை பொதுச்சபைக்கோ பாதுகாப்புச்சபைக்கோ கொண்டு போகலாம். அங்கேயும் பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரம் மிக்க சீனாவும். ரஷ்யாவும் அரசாங்கத்தின் பக்கம் உண்டு. இது தான் ஐநா யதார்த்தம். ஜெனிவாவை கடந்து சிறப்புத் தீர்ப்பாயங்கள் அல்லது உலக நீதிமன்றங்களை நோக்கி செல்வது என்று சொன்னால் அங்கேயும் அரசுகளின் செல்வாக்கும் அழுத்தமும் அவசியம்.

முதலாவதாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் (International Criminal Court- ICC) செல்வதென்றால் அதற்கு இலங்கைத்தீவு ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்க வேண்டும். ரணில் விக்ரமசிங்க அவ்வாறு கையெழுத்திட மறுத்துவிட்டார். அதை ஒரு பெருமைக்குரிய சாதனையாகவும் அவர் கூறுவதுண்டு. எனவே ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடாத ஒரு நாட்டை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு போவதென்றால் அதற்கு பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அங்கு வீட்டோ அதிகாரம் மிக்க நாடுகளை வெற்றிகரமாக கையாளவேண்டும்.

அடுத்த வாய்ப்பு அனைத்துலக நீதிமன்றத்துக்குப் போவது (International Court of Justice-ICJ) அதைத்தான் பர்மாவில் ரோகிங்கியா முஸ்லிம்களுக்காக காம்பியா நாடு செய்தது. அனைத்துலக நீதிமன்றத்துக்கு விவகாரத்தை கொண்டு போவதற்கு ஒரு நட்பு நாடு வேண்டும். அதிலும் குறிப்பாக இது விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது முக்கியமானது. இந்தியாவை மீறி இந்த விடயத்தில் ஒரு வெளிநாடு தலையிடக் கூடிய ராஜீயச் சூழல் உண்டா?

11ஆம் பக்கம் பார்க்க...

**சுழியோடி**




# பிராந்திய செய்திகள்



## நாளை பாடசாலை வரும் மாணவர்களுக்கான அறிவித்தல்

நாட்டின் அனைத்து அரசாங்க பாடசாலைகளினதும் ஆரம்ப பிரிவு நாளைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், மாணவர்கள் பாடசாலைக்கு சீருடையில் வருவது கட்டாயப்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு இதனை குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைக்கு பொருத்தமான வேறு உடைகளை அணிந்து பாடசாலை வர முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## சேதனப் பசளையை விரைவில் விநியோகிக்க நடவடிக்கை

பெரும்போக வேளாண்மைச் செய்கைக்குத் தேவையான சேதனப் பசளையை விரைவில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித்த கே.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐந்து லட்சம் லீற்றர் நனோ நைதரசன் உரம் எதிர்வரும் சில தினங்களில் நாட்டிற்கு தருவிக்கப்படும் தரமற்ற உரத்தையோ கிருமிநாசினியையோ விவசாயிகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விநியோகிக்கப்பட மாட்டாது என்றும், விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித்த கே.ஜயசிங்க மேலும் தெரிவித்தார்



## பேருந்து கட்டணம் அதிகரிப்பு?

எரிபொருள் விலை அதிகரிக்க வேண்டுமாயின் குறைந்தபட்சம் டீசல் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடாது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.



அவ்வாறு டீசல் விலை அதிகரிக்கப்பட்டால் பேருந்து கட்டணமும் அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் எரிபொருள் தொடர்பான அமைச்சர் எவ்வித தீர்மானத்தை எடுப்பார் என்பது தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாகாணங்களுக்கு உள்ளான ரயில் சேவை நாளை ஆரம்பம்

நாளை முதல் மாகாணங்களுக்கு உள்ளான ரயில் சேவைகளுக்காக 133 ரயில்களை ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும் ,நாளை முதல் பருவகால பயணச் சீட்டை கொண்டுள்ள ரெயில் பயணிகளுக்கு மாத்திரமே ரெயில் சேவைகள் இடம்பெறும் என்று ரெயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர கூறினார்.

நாளை கொழும்புக்கு வரும் ரெயில் அளுத்கம, அவிசாவளை, அம்பேபுஸ்ச மற்றும் கொச்சிக்கடை வரையில் மாத்திரம் பயணிக்கும் என்று பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பயணத் தடை காரணமாக கடந்த சில மாதகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ரெயில் சேவை மாகாணங்களுக்குள் நாளை ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான ரெயில் சேவை இடம்பெறாது. மாகாணங்களுக்கு இடையிலான ரெயில் சேவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கூறினார்.

## மேல் மாகாணத்தில் விசேட சோதனை – 948 பேர் கைது!

மேல் மாகாணத்தில் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையில் 948 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (23) காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரையில் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 531 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இந்திய கடற்படைக்கு சொந்தமான 6 கப்பல்கள் இலங்கை வருகை

இந்திய கடற்படைக்கு சொந்தமான 6 கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

பயிற்சி நடவடிக்கைக்காக இந்த கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாக கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திற்கு இரண்டு கப்பல்களும் திருகோணமலை துறைமுகத்திற்கு 4 கப்பல்களும் வருகை தந்துள்ளன.

INS Magar, INS Shardul, INS Sujata (P56), INS Tarangini, INS Sudarshini, CGS Vikram ஆகிய கப்பல்களே வருகை தந்துள்ளன.

இந்திய கடற்படையின் பயிற்சி அதிகாரிகளுடனான கெடட் படையினர் இந்த கப்பல்களில் வருகை தந்துள்ளனர்.




# சினிமா துளிகள்




## விரைவில் அம்மாவாக போகும் பரீனா

பாரதி கண்ணம்மா என்ற சீரியல் இத்தனை நாட்கள் ஓடுவதே அந்த சீரியல் வில்லியாள் தான். அவர் கதையில் சில விஷயங்களை செய்யவே அதை வைத்து சீரியல் இத்தனை நாள் ஓடிக் கொண்டிருக்கிறது.

வெண்பா வேடத்தில் நடித்துவந்த பரீனாவுக்கு இன்னும் சில தினங்களில் குழந்தை பிறக்க இருக்கிறது. எனவே சீரியலில் இருந்து அவர் பிரேக் எடுப்பார் என்கின்றனர்.

அவருக்கு பதில் பாரதி கண்ணம்மா சீரியலில் வெண்பாவாக நடிக்கப்போவது இவர், அவர் என நிறைய பிரபலங்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன.

அதில் தொகுப்பாளினி மணிமேகலை, அனிதா சம்பத் போன்ற பிரபலங்கள் பெயர் இடம்பெறுகிறது. ஆனால் உண்மையில் புதிய நபர் நடிக்கப்போகிறாரா அல்லது கொஞ்சம் இடைவேளை எடுத்துக் கொண்டு மீண்டும் பரீனாவே நடிக்க வருவாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



## மார்டன் உடையில் ரசிகர்களை கவர்ந்த அனிகா.. இணையத்தில் செம வைரல்

தல அஜித் நடிப்பில் வெளியான என்னை அறிந்தால் படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் நடிகை அனிகா. இதன்பின் மிருதன், நானும் ரவுடி தான் உள்ளிட்ட பல படங்களில் நடித்து வந்த இவர், மீண்டும் விஸ்வாசம் படத்தில் அஜித்துக்கு மகளாக நடித்திருந்தார்.



குழந்தை நட்சத்திரமாக இருந்த அனிகா தற்போது மலையாளத்தில் உருவாகி வரும் படம் ஒன்றில் கதாநாயகியாக நடித்துள்ளாராம். அதுமட்டுமின்றி தமிழில் உருவாகி வரும் முக்கிய படங்களிலும் நடித்து வருகிறார் அனிகா.

இளம்நடிகையான இவர் படங்களில் மட்டுமல்லாமல், புகைப்படங்கள் மூலமாகவும் ரசிகர்களின் மனதை கவர்ந்துள்ளார். அதற்கு ஏற்றார் போல் தொடர்ந்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை பதிவு செய்து வருகிறார். அந்த வகையில் தற்போது லேட்டஸ்ட் மார்டன் உடையில் போட்டோஷூட் நடத்தி ரசிகர்களை கவர்ந்துள்ளார் அனிகா. இதோ அந்த புகைப்படங்கள்..

## புதிய படத்தில் நடிக்க கமிட்டாகியுள்ள அனிதா சம்பத்

அனிதா சம்பத் பிரபல தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக இருந்து மக்களின் மனதில் நின்றவர். அவர் வாசிக்கும் செய்திக்கு தனி ரசிகர்கள் கூட்டமே உள்ளார்கள் என்று கூறலாம்.

நன்றாக அந்த துறையில் ஜொலித்துக் கொண்டிருந்த அவர் திடீரென பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்க செய்தி வாசிப்பாளர் பணியை விட்டார்.

தற்போது பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு நடன நிகழ்ச்சியில் கலந்துகொள்வது, தனது யூடியூப் பக்கத்தில் வீடியோக்கள் பதிவிடுவது என இருக்கிறார்.

இந்த நேரத்தில் தான் அனிதா சம்பத் தனது இன்ஸ்டாவில் சோனியா அகர்வாலுடன் எடுத்த புகைப்படத்தை போட்டு படத்தில் கமிட்டாகி இருப்பதாக ஒரு தகவல் வெளியிட்டுள்ளார்.




## பிக் பாஸ் சீசன் 5 போட்டியாளர்களின் சம்பளம் எவ்வளவு தெரியுமா.. முழு லிஸ்ட் இதோ


விஜய் டிவியில் கமல் ஹாசன் தொகுத்து வழங்கும் பிக் பாஸ் சீசன் 5 கடந்த அக்டோபர் 3ஆம் திகதி முதல் தொடங்கியது. இந்த நிகழ்ச்சியில் இசை வாணி, ராஜு/, அபிஷேக் ராஜா, நமீதா மாரிமுத்து, பிரியங்கா தேஷ்பாண்டே, அபிநய், பாவனி ரெட்டி, உட்பட 18 பிரபலங்கள் கலந்து கொண்டனர். கடந்த அக்டோபர் 9ஆம் திகதி நமீதா மாரிமுத்து தவிர்க்க முடியாத சில காரணங்களால் வெளியேறி விட்டார். கடந்த அக்டோபர் 17ஆம் திகதி நாடியா சங் எலிமினேட் செய்யப்பட்டார். மேலும் இந்த வாரம் அபிஷேக் வெளியேறியுள்ளார். இந்நிலையில் தற்போது, 'பிக் பாஸ்' ஷோவில் கலந்து கொண்ட 18 போட்டியாளர்களுக்கும் ஒரு வாரத்திற்கு எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

லிஸ்ட் இதோ..

1. இசை வாணி - ரூ. 1 லட்சம்
2. ராஜு/ ஜெயமோகன் - ரூ. 1.5 லட்சம்
3. மதுமிதா - ரூ. 2.5 லட்சம்
4. அபிஷேக் ராஜா - ரூ. 1.75 லட்சம்
5. நமீதா மாரிமுத்து - ரூ. 1.75 லட்சம்
6. பிரியங்கா தேஷ்பாண்டே - ரூ. 2 லட்சம்
7. அபிநய் - ரூ. 2.75 லட்சம்
8. பாவனி ரெட்டி - ரூ. 1.25 லட்சம்
9. சின்னப்பொண்ணு - ரூ. 1.5 லட்சம்
10. நாடியா சங் - ரூ. 2 லட்சம்
11. வருண் - ரூ. 1.25 லட்சம்
12. இமான் அண்ணாச்சி - ரூ. 1.75 லட்சம்
13. அக்ஷரா ரெட்டி - ரூ.1 லட்சம்
14. சுருதி - ரூ. 70 ஆயிரம்
15. ஐக்கி பெர்ரி - ரூ.70,000 ஆயிரம்
16. தாமரைச்செல்வி - ரூ.70,000 ஆயிரம்
17. சிபி - ரூ.70,000 ஆயிரம்
18. நிரூப் - ரூ.70,000 ஆயிரம்



# பல்சுவை கதம்பம்



## மூக்கின் மேற்பகுதியில் உள்ள பிளாக் ஹெட்ஸை நீக்க சில குறிப்புகள் !!

நம் முகம் மற்றும் மூக்கின் மேல் கருப்பாகவும், வெள்ளையாக வும் அப்படி பிதுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து நம்முடைய கைகள் சும்மா இருக்காது. ஆனால் எல்லோரும் அதை கையில் தொடக்கூடாது என்பார்கள். ஆனால் இதற்கு சில வீட்டு வைத்திய முறைகள் இருக்கின்றன.

இதற்கென நோஸ் ட்ரிப்ஸ் கடைகளில் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்தி மூக்கின் மேலும் இடுக்குகளிலும் தேங்கியிருக்கும் வெண்புள்ளிகளை நீக்கிக் கொள்ள முடியும். ஆனால் அவை சில சமயம் அந்த இடங்களில் சருமத் தடிப்புகளும் அழற்சியும் கூட உண்டாவதுண்டு.

எப்படி வெளியேற்றுவது?: தேவையான பொருள்கள் வெந்நீர் மென்மையான துண்டு பிரஷ் லெமன் தூய்மை செய்யும் சிறுகத்தி. உப்பு. மென்மையான துண்டை எடுத்து வைத்திருக்கிறோமே அந்த துண்டை எடுத்து வெந்நீரில் நன்கு நினைத்து அதை அப்படியே வெதுவெதுப்புடன் முகத்தின் மேல் போட்டு மூடிக் கொள்ள வேண்டும்.

இது நம்முடைய சருமத் துவாரங்க்ள திறப்பதற்கு உதவி செய்யும். இது நாம் ஸ்கிரப் பயன்படுத்தி வெகுநேரம் தேய்த்த பின் கிடை க்கும் பலனை மிக வேகமாகவே நமக்குக் கொடுக்கும். பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் வரை இப்படி வைத்திருந்தால் போதும்.

ஒரு எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அந்த இரண்டு துண்டுகளில் இருந்தும் சிறிதளவு எலுமிச்சை சாறினை பிழிந்து விட்டு, அப்படியே அந்த எலுமிச்சை துண்டுகளின் மீது உப்பினை எடுத்து தூவி விடுங்கள்.

ஸ்கிரப்: இப்படி உப்பு தூவப்பட்ட எலுமிச்சை துண்டுகளை முகம் முழுவதும் குறிப்பாக, வெண் புள்ளிகள், கரும்புள்ளிகள் இருக் கிற பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொஞ்சம் அதிகமாகவும் அக்கறை கொண்டு நன்கு வட்ட வடிவில் தேயுங்கள். நன்கு ஸ்கிரப் செய்த பின் காட்டனில் வெதுவெதுப்பான தண்ணீரால் தொட்டு துடைத்து விட்டு, சுத்தம் செய்யும் கருவி கொண்டு முகம் மற்றும் மூக்குக்கு மேல் உள்ள வெண்புள்ளிகளை வெளியே எடுங்கள். வலி இல்லா மல் ஈஸியாக வெளியேறும்.



## இயற்கையான முறையில் முகம் பளிச்சிட அழகு டிப்ஸ்...!



கண்களைச் சுற்றி கருவளையம் இருந்தால், அழகான பெண்களைக் கூட அவலட்சணமாக்கிக் காட்டும். இதைப் போக்க, தேங்காய் எண்ணெயில் மஞ்சள்பொடி கலந்து குழைத்து, அதை வெதுவெதுப்பாகச் சுடவைத்துத் தினமும் குளிப்பதற்கு முன் கண்களைச் சுற்றி பூசி வைத்திருந்து, பத்து நிமிடங்கள் கழித்துக் குளித்து வந்தால் கருவளையம் காணாமல் போய்விடும்.

பசும்பாலில் ஒரு தேக்கரண்டி கசகசாவை இரவில் ஊறப்போட்டு காலையில் மைய அரைத்து முகத்தில் தேய்த்து வர, முகம் சிகப்பழகு பெறும்.

எலுமிச்சம்பழச் சாறில் பாசிப்பயறு மாவு கலந்து முகத்தில் தடவி, ஒருமணி நேரம் கழித்துக் கழுவினால் முகம் நல்ல நிறம் பெறும்.

அப்பிள் பழத்தை நறுக்கித் தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டால், கண்கள் நல்ல அழகு பெறும்.

உதட்டில் லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பு சிறிதளவு பவுடரைத் தேய்த்துவிட்டுப் பின்னர் போட்டால் அதிக நேரம் லிப்ஸ்டிக் அழியாமல் இருக்கும்.

இரண்டு தேக்கரண்டி அரிசி மாவு, இரண்டு தேக்கரண்டி தயிர் இவற்றைக் கலந்து இரவில் முகத்தில் தேய்த்துவிட்டுப் பின்பு நன்றாகக் கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால், பகலில் போட்ட மேக்கப் சுத்தமாக நீங்கி, முகம் இயல்பான நிலைக்கு வந்து விடும்.

தினமும் சுத்தமான ஆமணக்கு எண்ணெயைப் புருவங்களில் தேத்தால் புருவமுடி கறுப்பாகவும் கவர்ச்சியாகவும் தோன்றும்.

பால் ஏட்டில் சில துளிகள் எலுமிச்சம் பழச் சாறு கலந்து குழைத்து முகத்தில் தடவிக்கொண்டு, உலர்ந்ததும் கழுவ வேண்டும். சில நாட்கள் தொடர்ந்து இப்படிச் செய்தால் முகம் தக்காளி போல பளபளக்கும்.

முகம் பளபளப்பாக குளிர்ந்த நீரில் சிறிதளவு பாலைக் கலந்து அதை பஞ்சில் தொட்டு முகத்தில் பூசி அரைமணிநேரம் சென்றதும் முகத்தைக் கழுவி விடுங்கள். தினமும் இப்படிச் செய்தால் நாளடைவில் முகம் பளிச்சிடும்.

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

அவர் தமிழ் டயஸ்போராவை குறிப்பிடத்தக்க அளவுக்குப் பிரித்தாண்டார். அதன் மூலம் ஜெனிவாக் கூட்டத்தொடர்களில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் இரண்டுபட்டு நின்றது. இது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐ.நாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் தமிழ் மக்களை கையாள்வதற்கான வழிகளை ஒப்பீட்டளவில் இலகுவாக்கி கொடுத்தது.

ஆனால் ராஜபக்சக்கள் மறுபடியும் ஆட்சிக்கு வந்தபின் அந்த அமைப்புகளையும் தனி நபர்களையும் மறுபடியும் தடை செய்தார்கள். எனி னும் அவ்வாறு தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் தலைவரான கத்தோலிக்க மதகுரு இப்பொழுதும் யாழ்ப்பாணத்தின் தெருக்களில் லேடிஸ் சைக்கிளில் வழமைபோல நடமாடித் திரிகிறார். கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் தன்னை மூன்றில் இரண்டு தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்ற ஓர் அரசாங்கமாகவே காட்டிக்கொண்டது. ஆனால் ராஜபக்சக்களின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலிருந்தே வைரஸ் அரங்கினுள் பிரவேசித்தது. இதனால் ஏற்கனவே சரிந்து போயிருந்த பொருளாதாரம் மேலும் திணறியது. தவிர மேற்கு நாடுகள் மற்றும் ஐ.நாவின் அழுத்தமும் அதிகரித்தது. இவற்றின் விளைவாக ராஜபக்சக்கள் மேற்கையும் ஐ.நாவையும் நோக்கிய தமது அணுகுமுறைகளை தளர்த்தத் தொடங்கினார்கள். பசில் ராஜபக்சவை முன்னிறுத்தி ராஜிய மாற்றங்களை அவர்கள் முன்னெடுத்தார்கள். பசில் ராஜபக்ச, புதிய வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தியாவுக்கான தூதர் மிலிந்த மொரகொட போன்றோரை முன்னிறுத்தி அரசாங்கம் மேற்கையும் இந்தியாவையும் ஐநாவையும் சுதாகரிக்கும் வேலைகளை தொடங்கியது. அந்த வேலைகளின் ஒரு பகுதியாகவே ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அதே உபாயத்தை அதாவது தமிழ் டயஸ்போராவை அரவணைத்துப் பிரிக்கும் உத்தியை அரசாங்கம் கையிலெடுத்திருக்கிறதா?

அமெரிக்காவில் ஜனாதிபதி ஆற்றிய உரை அதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. அவர் உள்ளகப் பொறிமுறைக்கு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திடம் ஆதரவை கேட்கிறார். அதோடு தமிழ் டயஸ்போராவை நாட்டில் வந்து முதலீடு செய்யுமாறு கேட்கிறார். இது ஒரு உத்தி மாற்றம். அரசாங்கம் தமிழ் டயஸ்போராவின் இன்றியமையாத்தன்மையை விளங்கியிருப்பதை இது உணர்த்துகிறது.

இது விடயத்தில் டயஸ்போராவும் உட்பட முழுத்தமிழ் சமூகமும் மாறிவரும் புதிய சூழலை தொகுத்தும் பகுத்தும் கற்றுக்கொள்ளவேண்டும். எந்த அமெரிக்கா சவேந்திர சில்வாவை நாட்டுக்குள் வரக்கூடாது என்று பயணத் தடை விதித்ததோ அதே அமெரிக்காவில் கோட்டாபய ராஜபக்ஷ ஐநா பொதுச்செயலரை சந்திக்கிறார். ஐநாவில் உரை நிகழ்த்துகிறார். ஏறக்குறைய இதே காலப்பகுதியில்தான் சற்று முன்னதாக அவருடைய தமையனார் மஹிந்த ராஜபக்ச இத்தாலிக்கு போயிருந்தார். அங்கேயும் அவர் ஓர் அனைத்துலக மாநாட்டில் உரை நிகழ்த்தினார். தமிழர்கள் இங்கே ஒரு முக்கியமான விடயத்தை கவனிக்க வேண்டும். இந்த இரண்டு சகோதரர்களும் அரசியல் தீர்மானம் எடுத்து வழிநடத்திய ஒரு யுத்தத்தில் உத்தரவுக்கு கீழ்படியும் கருவியாக செயல்பட்ட ஒரு தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வரக் கூடாது என்று தடை செய்திருக்கிறது. அவரைப் போல மேலும் சில தளபதிகளை மேலும் சில மேற்கு நாடுகளும் குறிப்பாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் தடை செய்திருப்பதாக அறியமுடிகிறது.

ஜனாதிபதியின் மூளை என்று கருதப்படும் வியத்மக சிந்தனைக் குழாத்தின் இணையதளத்தில் கலாநிதி பாலித கோகன்ன (இப்பொழுது சீனாவுக்கான தூதுவராக இருப்பவர்) ஆற்றிய உரை ஒன்று உண்டு. அதிலவர் அவ்வாறு தமது தளபதிகள் வெளிநாடுகளில் படிக்கும் தமது பிள்ளைகளை சந்திக்க முடியாதிருப்பதைக் குறித்து கருத்துக் கூறியுள்ளார். இவ்வாறு தளபதிகளை நாட்டுக்குள் வரவிடாது தடுக்கும் மேற்கத்தைய அரசுகள் அந்த தளபதிகளுக்கு உத்தரவிட்ட அரசியல் தலைவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதை எப்படிப் பார்ப்பது? ஏய்த்தவர்களை தண்டிக்காமல் அம்புகளை தண்டிக்கும் இந்த அரசியலில் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை அந்நாட்டின் அரசுப் பிரதானிகள் சந்திக்கவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேற்கு நாடுகள் இலங்கை தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றன என்பதை இது உணர்த்துகிறது. ஓர் அரசுடைய தரப்பாக சிங்கள மக்களுக்குள்ள வசதி வாய்ப்புகளையும் இது காட்டுகிறது. இந்த அரசியலை சரியாக விளங்கிக் கொண்டால்தான் ஜனாதிபதியின் அழைப்பை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து தமிழ் டயஸ்போரா ஒரு பொருத்தமான முடிவை எடுக்கலாம்.

ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ் டயஸ்போராவிலுள்ள எட்டு அமைப்புகள் பதில் வினையாற்றியுள்ளன. இது விடயத்தில் தமிழ் டயஸ்போரா ஒரே கட்டமைப்பாக இல்லை. தமிழ் டயஸ்போரா எனப்படுவது ஒன்றுபட்ட ஒரு கட்டமைப்பல்ல. அதில் பல அடுக்குகள் உண்டு. பல்வேறு கருத்து நிலைகள் உண்டு. இந்த பல்வகைமையை ரணில் விக்கிரமசிங்க தனக்கு வசதியாகக் கையாண்டார். இப்போதுள்ள அரசாங்கமும் அவ்வாறு கையாளத்தக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. தாயகத்து கட்சிகள் செயற்பாட்டாளர்களுக்குள்ள அதே நோய் டயஸ்போராவிலும் உண்டு. இது விடயத்தில் டயஸ்போரா தன் பலமுணர்ந்து. தேவையுணர்ந்து தீர்க்கதரிசனத்துடன் ஒன்றுபட்டு முடிவெடுக்குமா?

07ஆம் பக்கம் பார்க்க...

எனவே ஜெனிவாவைக் கடந்து போவதற்கு தமிழ் மக்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அதை இரண்டு தளங்களில் தமிழ் மக்கள் செய்ய வேண்டியிருக்கும். முதலாவது தாயகத்தில் மக்கள் ஆணையைப் பெற்ற தமிழ் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கிடையில் ஜெனிவாவைக் கையாள்வதற்குரிய ஒரு பொதுப் பொறிமுறையை உருவாக்கவேண்டும். எந்த ஒரு தனி ஆளும் தனியோட்டம் ஓடாதபடிக்கு எல்லோரையும் ஒரு கூட்டுப் பொறிமுறைக்குப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும். இது மிக அவசியம். இதுதான் முக்கியமான அடிப்படையான முன் நிபந்தனையும்.

இதைப் பூர்த்தி செய்தபின் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தமிழகத்தில் உள்ள அமைப்புகளும் பலமாக லொபி செய்ய வேண்டும். தமிழகத்தை அழுத்தப் பிரயோக சக்தியாக பயன்படுத்தி இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டில் தமிழ் மக்களுக்கு சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தலாமா என்று முதலில் சிந்திக்க வேண்டும். இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிநாடும் தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுவதிலிருக்கும் வரையறைகளை கடந்த மூன்று தசாப்த காலங்கள் நிருபித்திருக்கின்றன. எனவே வெளியில் லோபி செய்வது என்பது முதலில் இந்தியாவிலிருந்தே தொடங்கவேண்டும். அடுத்தகட்டமாக ஏனைய உலக நகரங்களை நோக்கிப் போகவேண்டும். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பது பெருமளவுக்கு ஒரு பொதுக்கருத்தாக உருவாகியிருக்கிறது. உலகப் பொது மனித உரிமை நிறுவனங்கள். குடிமக்கள். சமூகங்கள். மத அமைப்புக்கள் போன்றவற்றின் மத்தியில் இக்கருத்து படிப்படியாக பரவலாகி வருகிறது.

ஆனால் இந்த மனிதாபிமான அபிப்பிராயத்தை அரசுகளின் தீர்மானமாக மாற்ற வேண்டும். அதற்கு லொபி செய்ய வேண்டும். ஈழத் தமிழர்களுக்காக லொபி செய்யக்கூடிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது ஈழத்தமிழர்கள் இனி அதிகம் அரசுகளை நோக்கி லொபி செய்ய வேண்டும். அதற்கு அவர்கள் தங்களுக்கு ஆதரவான அரசுகளை நட்பு சக்திகளாக வென்றெடுக்க வேண்டும். ஆனால் நாட்டில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடு காணப்படும் மூன்று கட்சிகளுமே தங்களுக்கிடையில் ஆகக்குறைந்தபட்ச அடிப்படையிலாவது ஐக்கியத்தைக் கட்டி எழுப்ப முடியாத ஒரு துர்ப்பாக்கிய சூழலில் உலக சமூகத்தில் அவ்வாறு நட்பு நாடுகளைச் சம்பாதிப்பார்கள் என்று எப்படி நம்புவது?

# சிரியாவில் காட்டுத் தீ வைத்த 24 பேருக்கு மரண தண்டனை

கடந்த ஆண்டில் உயிர்களை காவுகொண்ட காட்டுத் தீயை வேண்டுமென்று ஆரம்பித்ததாக குற்றங்காணப்பட்ட 24 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக சிரிய அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் மேலும் பதினொரு பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதோடு ஐந்து சிறார்களுக்கு 10 தொடக்கம் 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாக நீதி அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.


பயங்கரவாதச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளாக இவர்கள் விபரிக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டுப் போர் நீடிக்கும் சிரியாவின் மலைப்பாங்கான துறைமுக பிராந்தியங்களில் தீ வைப்புகளில் ஈடுபட்டதை இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். 2020 ஒக்டோபரில் ஏற்பட்ட இந்த காட்டுத் தீயில் மூவர் கொல்லப்பட்டனர்.


இதன்போது லடக்கியா, டார்டூஸ், ஹோம்ஸ் மற்றும் ஹமா மாகா ணங்களில் 187 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவானதோடு 280 சிறு நகரங்கள் மற்றும் கிராமங்கள் பாதிக்கப்பட்டதாக நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதில் 13,000 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் மற்றும் 11,000 ஹெக்டேயர் காட்டு நிலங்கள் அழிவடைந்ததாகவும் கூறப்படுகிறது. எனினும் காலநிலை மாற்றங்களால் கிழக்கு மத்திய தரை பிராந்தியத்தில் காட்டுத் தீ வருடாந்த நிகழ்வாக மாறியிருப்பதாக கூறப்படுகிறது.

2011ஆம் ஆண்டு சிரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது தொடக்கம் ஜனாதிபதி பஷர் அல் அசாத் அரசினால் ஆயிரக்கணக்கானவர்கள் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக மனித உரிமை குழுக்கள் கூறுகின்றன.



# எறும்புத்தின்னிகளின் விலை என்ன தெரியுமா? - விலங்குகளை வேட்டையாடும் மனித மிருகம்



இந்தியாவில் இன்றைய திகதிக்கு அதிகமாக கடத்தப்பட்டு. கொல்லப்படும் உயிரினம் யானையோ. புலியோ. சிறுத்தையோ இல்லை. காடுகளில் சுதந்திரமாக திரிந்துக் கொண்டிருக்கும் சாதாரண எறும்புத்தின்னி.

உலக உயிரினங்களில் அதிக பட்சமாக உடலெங்கும் செதில்களைக் கொண்ட ஒரே பாலூட்டி இனம் பங்கோலின் ரக எறும்புத்தின்னிகள் தான். இன்றைய நிலையில் உலக அளவில் சட்ட விரோதமாக விற்கப்படும் முதன்மையான விலங்கு. கடந்த பத்து ஆண்டுகளில் பத்து லட்சத்துக்கும் அதிகமான எறும்புத்தின்னிகள் காடுகளில் இருந்து வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாகப் பெரிய செதில்களைக்கொண்ட பங்கோலின் என்று அழைக்கப்படும் எறும்புத்தின்னிகள் அதிகம் அழிக்கப்பட்டிருக்கின்றன.

எந்த விலங்குகளாலும் எறும்புத்தின்னியின் செதில் சூழ்ந்த உடலைக் காயப்படுத்திவிட முடியாது. பலம்வாய்ந்த புலிகளின் நகங்களால்கூட இவ்விலங்கைக் காயப்படுத்திவிட முடியாது. அந்த அளவிற்கு பலம் பெற்றது எறும்புத் தின்னியின் செதில்கள். எறும்புத் தின்னிகளுக்கு மிகப் பெரிய இயற்கை கவசமாக இருப்பது அதன் செதில்கள்தான். எந்தக் கவசம் மற்ற விலங்குகளிடமிருந்து எறும்புத் தின்னியை பாதுகாக்கிறதோ அதே கவசம்தான் மனிதர்கள் அவற்றை அழிக்கக் காரணமாய் இருக்கிறது என்பதுதான் வேதனையிலும் வேதனை.

2017 ஆண்டு ஜனவரி 17. 2.9 டொன் எடையுள்ள எறும்புத்தின்னியின் செதில்களை தாய்லாந்து சுங்க அதிகாரிகள் ஸ்வர்ணபுரி விமான நிலையத்தில் கைப்பற்றினர். இவை சீனாவிற்கு கடத்த இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஜனவரி மாதம் வரை செதில்கள் நீக்கப்பட்ட இறந்து போன எறும்புத் தின்னிகளும் அவற்றின் செதில்களும் மட்டுமே அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. ஆனால் கடத்தல்காரர்கள் அதோடு நின்றுவிடவில்லை. தங்களின் எல்லைகளை விரிவாக்கி சுமத்ரா தீவுகளின் தடை செய்யப்பட்ட ஆளில்லா கடற்கரையையும் படகுகளையும் பயன்படுத்தி செதில் கடத்துவதை தொடர்ந்து கொண்டே இருந்தார்கள். பொலீசார் தீவிர சோதனையில் இருந்தாலும் செதில் கடத்தல் தொடர்ந்தது.

2017 ஆண்டு மே 1 கோலாலம்பூர் சர்வதேச விமான நிலைய சரக்கு வைக்கும் கார்கோவில் சுங்க அதிகாரிகள் சோதனையில் ஈடுபடுகிறார்கள். சோதனையில் எட்டு மூட்டைகளில் 408 கிலோ எறும்புத் தின்னியின் செதில்கள் இருப்பதைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்கின்றனர். செதில்கள் கொங்கோவில் இருந்து சவுதி அரேபியா வழியாக கோலாலம்பூர் விமான நிலையத்திற்குக் கடத்தி வந்தது தெரிய வருகிறது. அடுத்த நாள் மே 2 மீண்டும் தொடர்ந்த சோதனையில் எட்டு மூட்டைகளில் 304 கிலோ எறும்புத்தின்னியின் செதில்களைக் கைப்பற்றுகிறார்கள். இந்தச் செதில் மூட்டைகள் கொங்கோ தலைநகர் மின்சசாவில் இருந்து கென்யா. நைரோபி. சவுதி அரேபியா வழியாகப் பயணித்து கோலாலம்பூர் வந்திருக்கிறது. விசாரணையில் எல்லாச் சரக்குகளும் தவறான முகவரிகளில் இருந்து தவறான முகவரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. எல்லா மூட்டைகளிலும் உலர்ந்த மூலிகைகள் இருப்பதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. யாரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கூட கைது செய்ய முடியாமல் திணறியது அப்போதைய மலேசிய அரசாங்கம். இவற்றின் சர்வதேச மதிப்பு 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள். 10 கோடி இந்திய ரூபாய்.

2017 ஆண்டு ஒக்டோபர் 6 சுமத்ரா தீவில் இருக்கிற டுமாய் நகரின் மேடங்கம்பை என்கிற இடத்தில் கைரில் அன்வர் என்கிறவரின் தலைமையில் சுங்க அதிகாரிகள் வாகனச் சோதனையில் ஈடுபடுகிறார்கள். அப்போது சந்தேகப்படும்படியாக வருகிற ஒரு காரை ரகசியமாகப் பின் தொடர்கிறார்கள். கார் தடை செய்யப்பட்ட கடல் பகுதிக்குள் நுழைகிறது. பொலீஸ் பின்தொடர்வதை அறிகிற கார் ஓட்டுநர் காரை நிறுத்திவிட்டுத் தப்பித்து விடுகிறார். காரை சோதனை செய்ததில் தடை செய்யப்பட்ட 100 எறும்புத் தின்னிகளும் 37 கிலோ எறும்புத் தின்னியின் செதில்களும் இருப்பதைக் கண்டறிகிறார்கள். இவற்றின் கறுப்பு சந்தை விலை 2.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இந்தோனேசியா. மலேசியா எனக் கடத்தி வரப்படுகிற எறும்புத் தின்னியின் செதில்கள் அங்கிருந்து சீனாவிற்கும் வியட்னாமிற்கும் கடத்தப்படுகின்றன. செதில்களைப் பொறுத்தவரை சீனா தான் கடத்தல்காரர்களின் ஹொட் ஸ்பாட். சீனாவிலும் வியட்நாமிலும் பங்கோலின் ரக எறும்பு திண்ணியின் மாமிசம் மிகவும் விரும்பி உண்ணப்படும். இவற்றின் செதில்கள் சீன மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இத்தனைக்கும் இந்த பங்கோலின் ரக எறும்புத்தின்னிகளின் செதில்கள் மனித நகங்களைப் போல வெறும் கெராடின் என்கிற வேதிப் பொருளால் ஆனது தான். அதற்கு மருத்துவக் குணங்கள் இருப்பதாக சிலர் வதந்திகளைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அவற்றை உண்மை என நம்பிய சீனர்கள் எறும்புத் தின்னியின் செதில்களுக்காகத் தவம் இருக்கிறார்கள்.

செதில்களைக் கடத்துவதில் கடத்தல் கும்பல் இப்போது தனியார் கூரியர் நிறுவனங்களைப் பயன்படுத்துவதாக சொல்கிறார்கள். நிலம். நீர். காற்று என ஐம்பெரும் பூதங்களில் மூன்று பூதங்களின் வழியில்தான் செதில் கடத்தல் நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது. தரைவழி. கடல்வழி. வான்வழி என எல்லா வழிகளிலும் அதிவிரைவு போக்குவரத்து. எளிதில் கண்டுபிடிக்க முடியாது போன்ற வசதிகளால் கொள்ளையர்கள் கூரியரை பயன்படுத்துகிறார்கள் என்பதை ஏற்காமலும் இருக்க முடிவதில்லை. தவறான முகவரியை பார்சல்களில் கொடுத்து விட்டுச் சரியான இடங்களுக்குச் சென்று பார்சல்களை பெற்றுக்கொள்கிறார்கள். எல்லாச் செயல்களுக்கும் அந்தச் சரியான இடத்தில் இருக்கிற ஒருவர் உதவிக் கொண்டே இருக்கிறார் என்பதுதான் உண்மை. கடத்தலுக்குக் கடத்தல்காரர்கள் மட்டுமே காரணமாக இருப்பதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசின் துறைகளில் இருக்கிற ஒரே ஒருவரை கைக்குள் போட்டுக் கொள்ளுகிற கடத்தல் கும்பல் மற்ற எல்லாத் தடைகளையும் எளிதாகத் தாண்டி விடுகிறது.

சீனா. தாய்லாந்து எனக் கடந்து போகிற உலகளாவிய செதில் கடத்தல் சம்பவங்களில் சில தமிழ்நாட்டிலும் நடந்திருக்கிறது. நவம்பர் 21. 2015 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்துக்கு உள்பட்ட வனப்பகுதியில் இருந்து எறும்புத்தின்னிகளைக் கொன்று அதன் ஓடுகளை காரில் கடத்துவதாக வனத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து பவானிசாகர் வனச்சரகர் பெர்னாட். வனரோந்து படை வனச்சரகர் சாமியப்பன் மற்றும் வன ஊழியர்கள் பவானிசாகர் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மல்லியம் பிரிவு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு காரை சோதனையிட்டதில் அதில் எறும்புத்தின்னி ஓடுகள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். கைது செய்யப்பட்ட மூன்று பேர் அளித்தத் தகவலின் பெயரில் கடத்தலுக்கு முக்கிய காரணமாக செயல்பட்ட பத்து பேரை நான்கு தனிப்படை அமைத்துத் தேடியது வனத்துறை. பத்தில் ஐந்து பேர் மட்டும் கோவையில் கைது செய்யப்பட்டனர். விசாரணையில் செதில்கள் சென்னையில் இருந்து சீனாவிற்கு கடத்த இருந்தது தெரிய வந்தது. சிக்கியவர்கள் யாருக்கும் செதில்களை ஏன் கடத்துகிறோம் எதற்கு கடத்துகிறோம் என்ற எந்த அடிப்படைத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்பதுதான் வினோதம்.

குமுளி பகுதியில் கைப்பற்றப்பட்ட செதில்கள் குறித்து விசாரித்த வனத்துறை அளித்த அறிக்கை மற்ற உலக நாடுகளை விட வித்தியாசமானது. "எறும்புத்தின்னியின் செதில்களை எரிப்பதன் மூலம் வெளியே கிளம்பும் புகையைச் சுவாசித்தால் மூலவியாதி குணமாகும்" என்ற தவறான நம்பிக்கையால் உள்ளூர் மக்கள் எறும்புத்தின்னியை வேட்டையாடி இருக்கிறார்கள். தமிழகத்திலும் சட்டவிரோதமாக எறும்புத்தின்னிகள் கொல்லப்பட்டு செதில்கள் விற்பனை செய்யப்படுவதாக வனத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துப்படி. சட்டவிரோத வன வியாபாரத்திற்கான பிரபலமான நாடுகள் என இந்தோனேசியாவையும். தாய்லாந்தையும் அறிவித்துள்ளது. மிகப்பெரிய விமான நிலையம். மிக நீண்ட நில எல்லைகளைக் கொண்டிருப்பது மற்றும் அண்டை நாடுகளுக்கான தொடர்பு என தாய்லாந்து நாட்டை எல்லா வகைகளிலும் விலங்குகள் கடத்தலுக்கு மையப்புள்ளியாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தோனேசியாவில் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் பொதுவாக உள்ளூர் மக்களால் நடத்தப்படுகின்றது.

இந்தோனேசியாவின் ஜகாரிடா. யோகியாகர்ட்டா. மாநாடொவ் போன்ற முக்கிய நகரங்களில் எல்லாம் விலங்குகள் மார்க்கெட் சட்ட விரோதமாக இப்போதும் செயல்பட்டு வருகிறது. அழிந்து வரும் உயிரினம் என உலக விலங்குகள் நல வாரியம் அறிவித்துள்ள விலங்குகளின் மிச்சங்கள் இந்தோனேசியா மார்க்கெட்டுகளில் இருக்கின்றன என்பதுதான் அதிர்ச்சியான தகவல். தாய்லாந்து இந்தோனேசியாவில் விலங்குகள் கடத்தல் குறித்தத் தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தும் அண்டர்கவர் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.

காட்டுப் பகுதியில் எத்தனை எறும்புத் தின்னிகள் எஞ்சியுள்ளன என்பது தெரியவில்லை. நான்கு ஆசிய இனங்கள் அபாயகட்டத்தில் இருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். ஆசியாவில் இருந்த 100ல் 85 சதவிகித எறும்புத்தின்னிகள் அழிந்துவிட்டன. கடத்தல்காரர்கள் தங்களின் பார்வையை இப்போது ஆப்ரிக்கா நாடுகளின் மீது திருப்பி இருப்பது உலகின் மீதமிருக்கும் எறும்புத்தின்னிகளையும் அழித்துவிட வழிகோலியிருக்கிறது. ஆப்கானிஸ்தானின் நான்கு பங்கோலின் இனங்கள் ஆபத்தானவை அல்ல் ஆனால் அவையும் பாதிக்கப்படக்கூடியவை எனக் கருதப்படுகின்றன. எறும்புத்தின்னியின் தேவை அதிகரிக்குமானால் உலகம் முழுமைக்கும் மீதமிருக்கிற எறும்புத் தின்னிகள் கொல்லப்படும் வாய்ப்பு இருக்கிறது. கடத்தல்காரர்கள் அடிக்கடி இலக்கை மாற்றிக் கடத்தல் திட்டங்களை மாற்றி அமைக்க நேர்ந்தால் அவற்றிற்கும் பாதிப்பு வரும் என்கிறது விலங்குகள் நல வாரியம்.

அழிந்து வரும் உயிரினங்களில் சர்வதேச வர்த்தகம் குறித்த சபையில் சீனா உறுப்பினராக உள்ளது. CITES (Convention on International Trade in Endangered Species) ஆனால் இன்னொரு பக்கம் மருத்துவ பாரம்பரியங்களை மதிப்பதற்காக எறும்புத்தின்னிகளின் நுகர்வுகளைச் சீன அரசு அனுமதிக்கிறது. மருத்துவ சிகிச்சை மற்றும் காப்புரிமை பெற்ற சீன மருந்துகளின் உற்பத்திக்கு பங்கோலின் செதில்கள் பயன்படுத்தப்படுவதே அதற்கு முக்கிய காரணம். விலங்குகளை வேட்டையாடுதல் அல்லது விலங்குகளை வர்த்தகம் செய்வது தொடர்பான தடைகளை நடைமுறைப்படுத்தியுள்ள பெரும்பாலான நாடுகள். தடையை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளை விதித்திருக்கிறது. இருப்பினும் போதிய வன பணியாளர்கள் இல்லாமை மற்றும் நிதி இல்லாமை காரணமாக. தவறுகள் நடந்து விடுவதாக சில நாடுகள் ஒப்புக் கொள்கின்றன.

எல்லா நாடுகளிலும் விலங்குகள் கடத்தல் குறித்த தண்டனைகள் ஒரு தடையாக இருக்க வேண்டும். அப்படி நடக்காதவரை விலங்குகள் வர்த்தகம் தொடர்ந்துக்கொண்டே இருக்கும். காரணம் பணம் பத்தும் செய்யும் அந்தப் பத்துக்காக மனிதன் எதையும் செய்வான்.

**-விகடன்-**

## சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்



அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலக பந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.

மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு. நாத்திகனுக்கு தருமசிந்தனை இருக்கலாம். ஆனால் மதகோட்பாடு இருக்க இயலாது. மதத்தில் நம்பிக்கை வைத்தவனுக்கு தருமசிந்தை அவசியம் இருக்க வேண்டும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான். காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

நமக்குப் பல அனுபவங்களை பெற்றுத்தர இந்த உலகம் படைக்கப்பட்டது. இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் நம்மால் அனுபவிக்கப்பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என யாரிடமும் கேட்காதே. வேண்டுதல் ஒரு பலவீனமாகும். இந்த வேண்டுதல் தான் நம்மை பிச்சைக்காரர்களாக்குகிறது. நாம் அனைவரும் ராஜகுமாரர்கள். பிச்சைக்காரர்கள் அல்ல.

கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது. ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்த கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும்.

ஏதாவது தவறு செய்துவிட்டால், ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே!" என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான். ஆனால், இன்னும் உன்னை நல்லவனாக்க முயற்சி செய்ய வேண்டும்.

மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.

உதவி செய், சண்டை போடாதே. ஒன்றுபடுத்து, அழிக்காதே. சமரசமாய் இரு, சாந்தம் கொள், வேறுபாடு காட்டாதே.

தீமையை எதிர்க்காதீர்கள், அகிம்சையே மிக உயர்ந்த ஒழுக்க லட்சியம் என்று ஆச்சாரியார்கள் உபதேசித்து இருக்கிறார்கள். இந்த உபதேசத்தை நம்மில் சிலர் அப்படியே கடைப்பிடிக்க முயல்வோமானால் சமுதாய அமைப்பே இடிந்து தூள் தூளாகிவிடும்!

அயோக்கியர்கள் நம் சொத்துக்களையும் நம் வாழ்க்கையையும் பறித்துக் கொண்டு தங்கள் விருப்பப்படி நம்மை ஆட்டி வைப்பார்கள். இது நமக்குத் தெரியும். இத்தகைய அகிம்சை சமுதாயத்தில் ஒரேயொரு நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட பெரும் நாசமே விளைவாக இருக்கும்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன். அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

## கொவிட்-19: உலகில் 180,000 சுகாதார ஊழியர்கள் பலி

கொவிட்-19 நோய்ப்பரவலால், சுகாதாரத்துறை ஊழியர்கள் பல்லாயிரம் பேர் உயிரிழந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. நோய்ப்பரவல் ஆரம்பித்ததில் இருந்து இவ்வாண்டு மே மாதம் வரையில் 80,000 முதல் 180,000 பேர் வரை பலியாகி இருக்கக்கூடும் என்று மதிப்பிடப்படுவதாக அது குறிப்பிட்டது.

உலக அளவில் தடுப்பூசிகள் சமமான முறையில் விநியோகிக்கப்படாததே அதற்குக் காரணம் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கெப்ரியேஸஸ் சாடினார். தடுப்பூசி போடுவதில், சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார். 119 நாடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து சராசரியாக, ஐந்தில் 2 சுகாதாரத்துறை ஊழியர்கள் மட்டுமே முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளதாக கெப்ரியேஸஸ் குறிப்பிட்டார். இவ்வாண்டு இறுதியில், 80க்கும் மேற்பட்ட நாடுகளின் மக்கள் தொகையில், 40 வீதத்தினர் தடுப்பூசி போட்டிருக்க மாட்டார்கள் என்று அவர் எச்சரித்தார். தடுப்பு மருந்துப் பற்றாக்குறையே அதற்குக் காரணமாகும்.

## பிரிட்டிஷ் முடியாட்சிக்கு பதில் பார்படோஸ் ஜனாதிபதி தேர்வு

கரீபியன் தீவு நாடானா பார்படோஸ் தனது கடந்தகால காலனித்துவத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அரச தலைவர் பதவிக்கு பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணிக்கு பதில் முதல் முறை ஜனாதிபதி ஒருவரை தேர்வு செய்துள்ளது. கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சன்ட்ரா மேசன் ஜனாதிபதி பதவிக்காக மூன்றில் இரண்டு வாக்குகளை பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது ஒரு மைல்கல் என்று அந்நாட்டு அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பிரிட்டிஷ் காலனியான பார்படோஸ் 1966 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. எனினும் 300,000 மக்கள் தொகையை மாத்திரமே கொண்ட அந்த நாடு தொடர்ந்து பிரிட்டன் முடியாட்சியுடன் உறவை பேணியது. எனினும் முழுமையான இறைமையை பெறுவது பற்றி கோசம் அண்மைக் காலத்தில் வலுத்து வந்தது. இந்நிலையில் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்ற 55 ஆவது சுதந்திர தினமான வரும் நவம்பர் 30 ஆம் திகதி மேசன் பதவி ஏற்கவுள்ளார்.





## ஆப்கானில் சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரிப்பு

ஆப்கானிஸ்தான் சிறுவர்கள் தம் குழந்தைப் பருவத்தை வன்முறைகள் மற்றும் முரண்பாடுகளுக்குள் இழந்துவிடக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்) தெரிவித்துள்ளது. காபூலில் தலிபான்கள் இடைக்கால ஆட்சியை அமைத்ததைத் தொடர்ந்து வன்முறைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளதோடு சிறுவர் உரிமை மீறல்களும் அங்கு தீவிரமடைந்துள்ளன. இதனையிட்டு சிறுவர்களின் நலன்களுக்காக செயற்பட்டு வரும் சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் இவ்வாறு கவலை வெளியிட்டிருப்பதாக 'ரிபப்ளிக்வேர்ல்ட்' சுட்டிக்காட்டியுள்ளது.

கந்தஹாரிலுள்ள ஷீஆ முஸ்லிம் பள்ளிவாசலொன்றில் வெள்ளிக்கிழமை தொழுகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டமைக்கும் அவர்களில் 17 வயதுக்கு உட்பட்ட இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளமைக்கும் அந்த நிறுவனம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. 'ஆப்கானிஸ்தானில் சிறுவர்களும் அவர்களது உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று யுனிசெப் அண்மைய ட்வீட் ஒன்றின் ஊடாக வலியுறுத்தியுள்ளது.

இமாம் பர்கா-இ பாத்திமா என்ற பெயர் கொண்ட இப்பள்ளிவாசலில் இடம்பெற்ற இத்தற்கொலைத் தாக்குதலில் எழுபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் உரிமை கோரியுள்ளன. இவ்வாறான கொடூரத் தாக்குதலொன்று வடக்கு நகரமான குந்தூஸிலும் அண்மையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

## பாகிஸ்தான் வீரர்களுக்கு பிரதமர் இம்ரான் கான், ரமீஸ் ராஜா பாராட்டு




*இந்திய அணிக்கு எதிராக உலகக் கோப்பைப் போட்டியில் இதுதான் முதல் வெற்றி, மிகப் பெரிய வெற்றி, இந்தப் பயணம் தொடரட்டும் என்று பாகிஸ்தான் அணிக்கு பிரதமர் இம்ரான் கான், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் ரமீஸ் ராஜா இருவரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். துபாயில் நேற்று நடந்த டி20 உலகக் கோப்பைப் போட்டியின் சூப்பர்-12 சுற்றில் குரூப்-2 பிரிவில் இந்திய அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தான்.*

*முதலில் பெட் செய்த இந்திய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 151 ரன்கள் சேர்த்தது. 158 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, விக்கெட் இழப்பின்றி, 17.5 ஓவர்களில் 152 ரன்கள் சேர்த்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. கடந்த 1992ம் ஆண்டு சிட்னியில் விளையாடியதிலிருந்து 50 ஓவர்கள் மற்றும் டி20 போட்டிகளில் இந்திய அணிக்கு எதிராக பாகிஸ்தான் 12 போட்டிகளில் விளையாடி அனைத்திலும் தோல்வி அடைந்திருந்திருந்தது. ஆனால், பாகிஸ்தான் அணி முதல் முறையாக நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணியை வென்று தனது தாகத்தை தீர்த்துக்கொண்டது.*

*இந்த வெற்றிக்கு பாகிஸ்தான் அணியை அந்நாட்டுப் பிரதமர் இம்ரான் கான், கிரிக்கெட் வாரியத் தலைவர் ரமீஸ் ராஜா இருவரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில் "பாகிஸ்தான் அணிக்கு எனது வாழ்த்துகள். குறிப்பாக அணியை வழிநடத்திச் சென்ற பாபர் அஸாமுக்கு வாழ்த்துகள். பாபர் அஸாம், ரிஸ்வான், ஷாகின் அப்ரிடி மூவரும் சிறப்பாகச் செயல்பட்டனர். உங்களால் தேசம் பெருமை அடைகிறது" எனத் தெரிவித்துள்ளார்.*

*பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ரமீஸ் ராஜா ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில் "அல்ஹம்துலில்லாஹ்.. இதுதான் முதல் வெற்றி. மிகப்பெரிய வெற்றி. ஆனால், நாம் புறப்பட்ட இடத்தையும், இப்போது அடைந்த பயணத்தையும் நினைவில் வையுங்கள். அனைத்து பாகிஸ்தான் மக்களுக்கும் பெருமைக்குரிய தருணம். இந்த இனிய தருணத்தை அளித்த பாகிஸ்தான் வீரர்களுக்கு நன்றி" எனத் தெரிவித்துள்ளார்.*

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## பானுக்க, அசலங்கவின் ஆபார ஆட்டத்தால் பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை



பங்களாதேஷ் அணிக்கு எதிரான சுப்பர் 12 ஆட்டத்தில் இலங்கை அணி 05 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜா மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 172 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக குசால் ஜனித் பெரேரா மற்றும் பெத்தும் நிசங்க களமிறங்கி ஆடிய போது குசல் பெரேரா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க பின்னர் நிசங்கவுடன் இணைந்தார் சரித் அசலங்க. இருவரும் சிறப்பான தொரு இணைப்பாட்டம் வழங்குவார்கள் என்ற நிலையில் பெத்தும் நிசங்க 24 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அசலங்கவுடன் இணைந்தார் அவிஸ்க பெர்னாண்டோ. அவரும் வந்த வேகத்தில் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழக்க பின்னர் இணைந்தார் வனிந்து ஹசரங்க. அவரும் வந்த வேகத்தில் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிக்க சரித் அசலங்கவுடன் பானுக்க ராஜபக்ஷ இருவரும் நான்காவது விக்கெட்டுக்காக நல்லதொரு இணைப்பாட்டத்தினை வழங்கி இருவரும் இலங்கை அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்தனர். பானுக்க ராஜபக்ஷ 31 பந்துகளில் 53 ஓட்டங்களையும் அசலங்க 80 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். அணியின் தலைவர் தசுன் சானக்க ஒரு ஓட்டம் பெற்று ஆட்டமிழக்காமால் இருக்க இலங்கை அணி 18.5 ஓவர்கள் நிறைவில் 172 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்து வெற்றி பெற்றது.

சுப்பர் 12 சுற்று போட்டியில். முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி. 4 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை பெற்றது. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி. முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. இதன்படி. களமிறங்கிய பங்களாதேஷ் அணி மிகச்சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 171 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பங்களாதேஷ் அணியின் ஆரம்பத்தை பொறுத்தவரை அந்த அணிக்கு மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. மொஹமட் நயீம் மற்றும் லிட்டன் டொஸ் ஆகியோர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். எனினும். லிடன் டாஸ். லஹிரு குமாரவின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க. அனுபவ வீரர் சகிப் அல் ஹஸன் 10 ஓட்டங்களை பெற்று. சாமிக்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மொஹமட் நயீம் மற்றும் அடுத்து களமிறங்கிய. முஷ்பிகூர் ரஹீம். பங்களாதேஷ் அணிக்காக மிகச்சிறந்த இன்னிங்ஸ் ஒன்றை ஆடினர். இவர்கள் இருவரும். விக்கெட்டுகளை விட்டுக்கொடுக்காமல் ஓட்டங்களை குவித்தனர். இதில் மொஹமட் நயீம் அரைச்சதம் கடக்க. முஷ்பிகூர் ரஹ்மான் வேகமாக ஓட்டங்களை குவித்தார். நயீம் அதிகபட்சமாக 62 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்க. இறுதிவரை ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடிய முஷ்பிகூர் ரஹீம். 57 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இவர்களுடன். ஏனைய துடுப்பாட்ட வீரர்களும் பங்களிப்பை வழங்கியிருந்தனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் லஹிரு குமார. சாமிக்க கருணாரத்ன மற்றும் பினுர பெர்னாண்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர். 49 பந்துகளில் 80 ஓட்டங்கள் பெற்ற சரித் அசலங்க போட்டியின் நாயகனாக தெரிவானார்.

## மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி சாதனை படைத்தது இங்கிலாந்து

20க்கு20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் 12 சுற்றின் 2ஆவது போட்டியில் நடப்புச் சம்பியன் மேற்கிந்திய தீவுகள் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வீழ்த்தியது. 20க்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 14ஆவது லீக் போட்டியில் நடப்பு சம்பியன் மேற்கிந்திய தீவுகள் - இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டுபாயில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியானது இங்கிலாந்தின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 55 ஓட்டங்களுக்குச் சுருண்டது. ரி 20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரு அணி எடுத்த 3ஆவது குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்குமுன் ரி 20 உலகக் கிண்ண வரலாற்றில் இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகளில் நெதர்லாந்து பெற்ற 39 ஓட்டங்கள் (2104). 44 ஓட்டங்களைப் (2021) பெற்று முதலிரண்டு இடங்களில் உள்ளது. 20க்கு 20 உலகக் கிண்ண வரலாற்றில் மேற்கிந்தியத் தீவுகள் பதிவுசெய்த மிகக் குறைந்த மொத்த எண்ணிக்கையும் இதுவாகும்.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெயில் மாத்திரம் அதிகபட்சமாக 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள. ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறினர். இங்கிலாந்து அணி தரப்பில் 2.2 ஓவர்களை வீசிய ஆடில் ரஷித் 2 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி 20க்கு20 போட்டிகளில் தனது அதிசிறந்த பந்துவீச்சுப் பரிதியைப் பதிவு செய்தார். டைமல் மில்ஸ் மற்றும் மொயின் அலி ஆகிய இருவரும் தலா 2 விக்கெட் வீதம் கைப்பற்றினர். அதன்பின் எளிய இலக்கை துரத்திய இங்கிலாந்து அணியும் ஆரம்பத்தில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான ஜேசன் ரோய் 11 ஓட்டங்களையும். ஜொன்னி பேர்ஸ்டோவ் 9 ஓட்டங்களையும். மொயின் அலி 3 ஓட்டங்களையும். லியாம் லிவிங்ஸ்டன் ஒரு ஓட்டத்தையும் எடுத்து ஏமாற்றம் அளித்தனர். இருப்பினும் மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஜோஸ் பட்லர் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார். இறுதியில் இங்கிலாந்து அணி. 8.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 56 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் 6 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்திய இங்கிலாந்து அணி. முதல் முறையாக 20க்கு 20 உலகக்கிண்ணப் போட்டிகள் வரலாற்றில் மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி சாதனை படைத்தது. இந்தப் போட்டியில் பந்துவீச்சில் மிரட்டிய இங்கிலாந்து வீரர் மொயின் அலிக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. ரி 20 உலகக் கிண்ண வரலாற்றில் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை பெற்றுக்கொண்ட சாதனையை நெதர்லாந்து தன்வசம் வைத்திருக்கிறது. இலங்கை அணிக்கு எதிராக நெதர்லாந்து 39 மற்றும் 44 ஓட்டங்களை பெற்றமையே உலக கிண்ண வரலாற்றில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.



# உலக பார்வை



## பாகிஸ்தான் பயங்கரவாதி பலி



ஜம்மு - காஷ்மீரில் பாதுகாப்பு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதலில், பாக்., கைதி சுட்டுக் கொல்லப்பட்டார். ஜம்மு - காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டம், சுரன்கோட்டிற்கும், ரஜோரி மாவட்டம் தனமண்டிக்கும் இடையே, வனப் பகுதியில் பாக்., பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர். பாதுகாப்பு படையினர் மீது அவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதையடுத்து, ஜம்மு - ரஜோரி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, காட்டைச் சுற்றிலும் பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா குட்டி விமானம் வாயிலாக காட்டுப் பகுதியில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை அடையாளம் கண்டு வேட்டையாடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

நேற்று பட்டா துரியன் காட்டிற்குள் முன்னேறிய பாதுகாப்பு படை யினரை நோக்கி பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இரு தரப் பிற்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில், பாதுகாப்பு படையைச் சேர்ந்த மூவர் படுகாயம் அடைந்தனர். பயங்கரவாதிகள் சுட்டதில், பாக்., கைதி ஜியா முஸ்தபா பலியானார். இது குறித்து, பொலீஸ் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறியதாவது, பாக்., ஆக்கிரமிப்பு காஷ்மீரைச் சேர்ந்த ஜியா முஸ்தபா என்ற லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாதி, மென்தர் வழியாக காஷ்மீருக்குள் ஊடுருவிய போது, 2003ல் கைது செய்யப்பட்டார்.

காஷ்மீர் பண்டிட்டுகள் கொலை செய்யப்பட்ட வழக்கில் முஸ்தபா முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்தார். கோட் பல்வால் சிறையில் இருந்த ஜியா முஸ்தபாவுக்கும், மென்தரில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளுக்கும் இடையே தொடர்பு உள்ளது தெரியவந்தது. இதையடுத்து ஜியா முஸ்தபா, மென்தர் பொலீஸ் நிலையத்திற்கு மாற்றப் பட்டார். பாதுகாப்பு படையினர் ஜியா முஸ்தபா உதவியுடன் நேற்று, காட்டுக்குள் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை பிடிக்கச்சென்றனர். அப்போது பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஜியா முஸ்தபா மற்றும் பாதுகாப்பு படையைச் சேர்ந்த மூவர் படுகாயம் அடைந்தனர். பாதுகாப்பு அரண் உடனே மூவரும் பழைய இடத்திற்கு திரும்பி விட்டனர். இதைத் தொடர்ந்து, கூடுதல் படை காட்டுக்குள் விரைந்தது. அங்கு ஜியா முஸ்தபா இறந்து கிடந்தார். அவரது உடலை பாதுகாப்பு படையினர் கைப்பற்றினர். மென்தர் காட்டைச் சுற்றிலும் பாதுகாப்பு படையினர் அரண் அமைத்து உள்ளனர். இதையடுத்து, பயங்கரவாதிகள் காட்டுக்குள் உள்ள இயற்கை குகைகளுக்கு சென்று பதுங்கி உள்ளனர். விரைவில் அவர்கள் பிடிபடுவர் என அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் தொடர்ந்து சரியும் ஜோ பைடனின் செல்வாக்கு

அமெரிக்காவில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் செல்வாக்கு சரிவடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் 46வது ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றார். கொரோனா பரவல், வேலையின்மை, பொருளாதார வீழ்ச்சி என பல பிரச்சினைகள் இவர் முன் இருந்தன. பதவியேற்றதும் கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் அதீத கவனம் செலுத்தினார் ஜோ பைடன். இதனால் பதவிக்கு வந்த 3 மாத காலத்தில் அமெரிக்க மக்களிடம் ஜோ பைடனின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்தது. ஆனால் தற்போது ஜோ பைடனின் செல்வாக்கு, இதற்கு முன் வேறு எந்த அமெரிக்க ஜனாதிபதியும் சந்திக்காத அளவுக்கு கடுமையாக சரிவடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகை ஒன்று நடத்திய கருத்து கணிப்பில் முதல் 3 மாதங்களில் ஜோ பைடனின் செல்வாக்கு 56 சதவீதமாக இருந்த நிலையில் தற்போது 11.3 சதவீதம் குறைந்து 44.7 சதவீதமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்தது மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகளை திரும்ப பெற்றதே இந்த சரிவுக்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

## உலகின் மிகப்பெரிய ஹைட்ரஜன் உற்பத்தியாளராக சவுதி அரேபியா

உலகின் மிகப்பெரிய ஹைட்ரஜன் உற்பத்தியாளராக திட்டமிட்டிருப்பதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது. எண்ணெய் உற்பத்தில் முதன்மை வகிக்கும் சவுதி அரேபியா, சூரிய ஒளி மற்றும் காற்று மூலம் புதுப்பிக்கப்பட்ட ஆற்றலை அதிகளவில் உற்பத்தி செய்கிறது.

இந்நிலையில் உலகின் மிகப்பெரிய ஹைட்ரஜன் உற்பத்தியாளராகவும் திட்டமிட்டிருப்பதாக சவுதி அரேபியாவின் எரிசக்தி அமைச்சர் சல்மான் தெரிவித்துள்ளார். இதற்கு முக்கிய காரணம் உலகம் மின்சார வாகனங்களுக்கு மாறிவிருவதே. கச்சா எண்ணெய்க்கு பெயர் பெற்ற சவுதி அரேபியா, தன்னுடைய பொருளாதாரத்தை கட்டமைக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




## பத்து நாட்டு தூதுவர்களுக்கு எதிராக துருக்கி பிரகடனம்

அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் உட்பட 10 நாடுகளின் தூதுவர்களை வரவேற்கப்படாத நபர்களாக துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் அறிவித்துள்ளார். இந்தத் தூதுவர்கள் கைது செய்யப்பட்டிருக்கும் செயற்பாட்டாளர் ஒஸ்மான் கவாலாவை விடுதலை செய்யுமாறு அழுத்தம் கொடுத்ததை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. கவாலா ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது மற்றும் ஆட்சி கவிழ்ப்பு சதியில் ஈடுபட்டதாக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் மீது இதுவரை குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. வரவேற்கப்படாத நபர் என்ற நிலை, குறித்த நபரின் இராஜதந்திர அந்தஸ்தை நீக்க வழி வகுக்கும் என்பதோடு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவரை தூதுவராக அங்கீகரிப்பதில் இருந்து நீக்கப்படுவது அல்லது நாட்டை விட்டு வெளியேற்றப்படும் நிலையை ஏற்படுத்தும்.

துருக்கியின் ஏழு நேட்டோ கூட்டாளிகள் உட்பட, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பின்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் தூதரகங்கள் கடந்த வாரம் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பு ஒன்றிலேயே கவாலாவை விடுதலை செய்ய வலியுறுத்தப்பட்டது. மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய நீதிமன்றம் கவாலாவை விடுதலை செய்யுமாறு அளித்த தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு ஐரோப்பாவின் பிரதான மனித உரிமை கண்காணிப்பு அமைப்பான ஐரோப்பிய கவுன்சில் துருக்கிக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் எஸ்கிஷேஹிரில் சனிக்கிழமை ஒரு கூட்டத்தில் பேசிய துருக்கி ஜனாதிபதி எர்துவான் "வெளிவிவகாரத்துறை அமைச்சருக்கு தேவையான உத்தரவுகளையும், என்ன செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளேன். அந்த 10 நாட்டு தூதர்களும் 'வரவேற்கப்படாத நபர்களாக' உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்" என்றார்.

தூதர்கள் துருக்கியைப் புரிந்துகொள்ளவேண்டும் அல்லது வெளியேறவேண்டும் என எர்துவான் கூறியதாக துருக்கி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுவரை இது தொடர்பாக அந்நாட்டு தூதர்களிடமிருந்து பெரிய எதிர்வினைகள் எதுவும் வரவில்லை. சம்பந்தப்பட்ட நாடுகள் தீவிரமாக ஆலோசித்து வருவதாக ஜெர்மனியின் வெளிநாட்டு விவகார அமைச்சகம் கூறியுள்ளது. இது தொடர்பாக இதுவரை எந்த ஒரு அதிகாரபூர்வ அறிவிப்பும் துருக்கி அதிகாரிகளிடமிருந்து வெளியாகவில்லை. தங்கள் நாட்டு தூதர் வெளியேற்றப்படும் அளவுக்கு எதுவும் செய்யவில்லை என நோர்வே வெளிவிவகார அமைச்சகம் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளது. துருக்கியின் வெளிவிவகாரத்துறை அமைச்சகம், 10 நாட்டு தூதர்களையும் கவாலா வழக்கு குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கையை திரும்பப்பெற கடந்த செவ்வாய்கிழமை வேண்டுகோள் விடுத்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. அந்த 10 நாட்டு தூதரகங்களும் துருக்கி செயற்பாட்டாளர் ஓஸ்மான் கவாலா வழக்கு விசாரணையில் உள்ள தொடர் தாமதத்தை குறிப்பிட்டு விமர்சித்திருந்தன. இது ஜனநாயகத்தின் மீதும், சட்டத்தின் மீதும், வெளிப்படைத் தன்மையின் மீதான மரியாதையை சீர்குலைக்கிறது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் ஓஸ்மான் கவாலாவின் வழக்கில் விரைவாக ஒரு தீர்வு காணவும், அவரை உடனடியாக விடுவிக்கவும் அறிக்கை வலியுறுத்தியுள்ளது. 2013ஆம் ஆண்டு துருக்கியில் நடந்த போராட்டங்கள் தொடர்பான வழக்கிலிருந்து கடந்த ஆண்டு கவாலா விடுவிக்கப்பட்டார். ஆனால் 2016ஆம் ஆண்டு எர்துவான் அரசை கவிழ்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது தொடர்பான வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். கவாலா தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுக்கிறார். தன் மீதான விமர்சனங்களை எர்துவான் பரவலாக நசுக்குகிறார் என்று சொல்வதற்கான எடுத்துக் காட்டு இது என்கிறார்கள் எர்துவானின் விமர்சகர்கள்.

# உலகின் பெரிய பாலைவனங்கள்

நம்முடைய பூமியில் எந்த பகுதி மிகக்குறைந்த மழைப்பொழிவைப் பெறுகிறதோ அந்த பகுதி பாலைவனம் எனப்படுகிறது. பொதுவாக ஆண்டுக்கு 250 மி. மீக்கும் குறைவாக மழைப்பொழிவைப் பெறும் பகுதிகள் பாலைவனங்கள் எனப்படுகின்றன. புவியின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம் ஆகும்.

**கிரேட் பேசின் பாலைவனம்**

கிரேட் பேசின் பாலைவனம் அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய பாலைவனமாகும். இது 190.000 சதுர மைல் நிலப்பரப்பு பரப்பளவை கொண்டது. இதன் கிழக்கே ரொக்கி மலைகள். மேற்கு நோக்கி சியரா நெவாடா எல்லை தெற்கில் Sonoran மற்றும் Mojave பாலைவனங்கள் மற்றும் வடக்கில் கொலம்பியா பீடபூமி போன்றவை உள்ளது. கிரேட் பேசின் பாலைவனம் ஆண்டு ஒன்றிற்கு 7-12 அங்குல அளவுக்கு மழைப்பொழிவு கொண்ட குளிர் பாலைவனமாகும். இது மிகவும் கடுமையான கோடை மற்றும் கடுமையான பனியும் அதிக குளிரையும் ஏற்படுத்தும் காலநிலையை கொண்டது.

**சிரியன் பாலைவனம்**

சிரியன் பாலைவனம் சிறு புல் வெளிகளுடன் கூடிய ஒரு மிகப்பெரிய பாலைவனம். இது சிரியாவின் அரேபிய தீபகற்பத்தின் வடக்கில் அமைந்துள்ளது. சிரிய பாலைவனம் சுமார் 200.000 சதுர மைல் நிலப்பகுதியை கொண்டது. இது சமதள பரப்புடன் அதிக பாறைகளை கொண்டது. சிரிய பாலைவனம் சிரியா. ஜோர்டான். ஈராக் மற்றும் சவுதி அரேபியாவின் பகுதிகளை உள்ளடக்கியது.

**பேட்டகோனியன் பாலைவனம்**

200.000 சதுர மைல்கள் மொத்த நிலப்பரப்பு பகுதியை கொண்டுள்ள தென் அமெரிக்க நாட்டிலுள்ள அர்ஜென்டினாவில் உள்ள மிகப்பெரிய பாலைவனமாகும். இது முதன்மையாக அர்ஜென்டினாவோடு கூட சிலி பகுதியிலும் பரவியுள்ளது. பேட்டகோனியன் பாலை வனம் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு கிழக்கு மற்றும் அன்டேஸ் மலைகளின் மேற்கு எல்லைகளை கொண்டுள்ளது. இது அதி குளிர் பாலைவனம். இங்குள்ள சராசரி வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ். அரிதாக 12 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும்.

**கிரேட் விக்டோரியா பாலைவனம்**

கிரேட் விக்டோரியா பாலைவனம் ஆஸ்திரேலியாவில் உள்ள மிகப்பெரிய பாலைவனம். இது 220.000 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ளது. இது தெற்கு ஆஸ்திரேலியாவின் கேவ்லெர் ரேஞ்செஸ் லிருந்து மேற்கு ஆஸ்திரேலியாவின் ஈஸ்டர்ன் கோல்ட்ஃபீல்ட்ஸ் பகுதி வரை நீண்டுள்ளது. இடியுடன் கூடிய மின்னல் இங்கு அடிக்கடி நடக்கும் ஒரு நிகழ்வு. வருடத்திற்கு 15 முதல் 20 இடி மின்னல்கள் ஏற்படுகிறது. குளிர்காலத்தில் வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸ் வரை குறையும். கோடை காலத்தில் வெப்பநிலை 32-40 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். மழைப்பொழிவு குறைவாக ஆண்டுக்கு 200-250 மிமீ வரை இருக்கும்.

**கலஹாரி பாலைவனம்**

கலஹாரி பாலைவனமானது தென் ஆப்பிரிக்காவில் காணப்படும் பரந்த வரண்ட புல் வெளிகளை கொண்ட பாலைவனமாகும். சுமார் 360.000 சதுர மைல் பரப்பளவை கொண்டுள்ளது இது நமீபியா. போட்ஸ்வானா மற்றும் தென் ஆப்பிரிக்காவின் பகுதிகளை கொண்டது. இதன் பெரும் பகுதிகள் நீரில்லாமல் வறண்ட சிவப்பு மணலை கொண்டு மூடியிருக்கும். இது உலர்ந்த பள்ளத்தாக்குகள் மற்றும் உப்பு படிந்த மேற்பரப்பை கொண்டு காணப்படுகிறது. இந்த பாலைவனத்தில் உள்ள ஒரே நதி ஒகாவாங்கோ. இது பாலைவனத்தின் வடமேற்குப் பகுதியில் ஒரு டெல்டாவுக்கு பாய்ந்து செல்கிறது. கலஹாரி பாலைவனம் சில தாவரங்களைக் கொண்டுள்ளது. இங்கு சில கற்றாழை இனங்கள் மற்றும் புதர்கள் போன்ற பாலைவன செடிகள் தாவரங்கள் உள்ளது.

**கோபி பாலைவனம்**

கோபி பாலைவனம் வடமேற்கு மற்றும் வட சீனாவின் பகுதிகள் மற்றும் மங்கோலியாவின் தெற்கு பகுதிகளை உள்ளடக்கியது. இது 500.000 சதுர மைல்கள் கொண்டது. இது மழை மறைவு பாலைவனம் என அழைக்கப்படுகிறது. இமயமலையானது இந்தியப் பெருங்கடலில் இருந்து வரும் மழைமேகங்களைத் தடுத்து இப்பகுதியை பாலைவனமாக்கி உள்ளது. இந்த பாலைவனத்தில் மணல் மட்டுமல்லாது பாறைகளும் அதிக அளவில் உள்ளது. இது ஒரு குளிர் பாலைவனம். பனி சில நேரங்களில் அதன் குன்றுகள் மீது குவிந்து காணப்படும்.

**அரேபியன் பாலைவனம்**

அரேபிய பாலைவனம் மேற்கு ஆசியாவில் உள்ள அரேபியா தீபகற்பத்தில் காணப்படுகிறது. 900.000 சதுர மைல் நிலப்பரப்புடன் மிகப்பெரிய பாலைவனங்களில் ஒன்றாகும். யேமன். பாரசீக வளைகுடா. ஓமன். ஜோர்டான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் பரவி காணப்படுகிறது. இதன் மத்தியப் பகுதியான ரப்-அல்-காலி உலகின் மிகப்பெரிய தொடர்ச்சியான மணல் அமைப்பினைக் கொண்டாகும். எனவே இவ்விடம் மணல் ஆறு என்று அழைக்கப்படுகிறது. இந்த பகுதியின் காலநிலை மிகவும் வறண்டதாக இருக்கும்.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 24.10.2021 அன்று வெளியிடப்பட்டது.